இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 165 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 12 – வெள்ளிக்கிழமை 26 ஜனவரி 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 165 : Thiruvalluvar Year - 2055 - Thai 12 - Friday 26 January 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் உலகத் தரத்துடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் திறப்பு விழாவில், அரங்கத்தில் நிறுவப்பட்டுள்ள ஏறுதழுவுதல் சிலையை திறந்து வைத்தார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக அரசு தடைகளை உடைத்தெறிந்ததால்தான் இன்றைக்கு ஏறு தழுவுதல் போட்டி கம்பீரமாக நடைபெறுகிறது! – இதுபோன்ற

# தமிழரின் பண்பாட்டுத் திருவிழாவை ஒற்றுமையாக நடத்துவோம்!

## மதுரை, அலங்காநல்லூரில் ‘கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கை’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து எழுச்சியுரை !

**மதுரை, ஜன. 26-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.01.2024) மதுரை, அலங்காநல்லூர், கீழக்கரையில், கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து ஆற்றிய விழாப் பேருரை வருமாறு:-**

வீரதீர விளையாட்டு களத்தை திறந்து வைக்க வந்திருக்கிறேன். மதுரையை தூங்கா நகரம் என்பார்கள். போட்டி என்று வந்துவிட்டால், தோல்வியை தூள்தூளாக்கும் நகரம் என்பதை வாடிவாசல் ஆண்டுதோறும் மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

**மூன்றாண்டில் மூன்று கம்பீரச் சின்னங்கள் மதுரையில்!**

தமிழர் பண்பாட்டு விளையாட்டான ஏறுதழுவுதலுக்கு சங்கம் வளர்த்த மதுரையில் இந்த மாபெரும் அரங்கம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசால் கட்டி எழுப்பப் பட்டிருக்கிறது. அதுவும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா கொண்டாடுகிற ஆண்டில் அமைக்கப்பட்டிருப்பது கூடுதல் சிறப்பு!

பல்லாயிரம் ஆண்டு பெருமை கொண்ட நம்முடைய தமிழினம் கொண்டாடும் ஏறுதழுவு தலுக்கான அரங்கத்தை கட்டி எழுப்பியவன் இந்த ஸ்டாலின் என்று வரலாற்றில் என்னு டைய பெயர் இடம்பெறுவது எனக்கு கிடைத்தி ருக்கக் கூடிய பெருமை!

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து, மூன்று ஆண்டுகள்தான் ஆகியிருக் கிறது. அதற்குள்ளாக, மூன்று முக்கியமான கம்பீரச் சின்னங்களை இந்த மதுரையில் ஏற்படுத்தியிருக்கோம்.

ஒன்று, தமிழினத்தினுடைய பழமையை சொல்கின்ற கீழடி அருங்காட்சியகம் மதுரைக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, கலைஞரின் பெயரால் மாபெரும் நூலகம் பிரமாண்டமாக மதுரை மாநகரில் அறிவு மாளிகையாக அமைக்கப் பட்டிருக்கிறது.

இப்போது மூன்றவதாக, இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் ஜல்லிக் கட்டுக்கு பெயர்போன அலங்காநல்லூரில் அமைக்கப்பட்டிருக்கிறது.

**மதுரைக்கு ஒன்றிய அரசு அறிவித்து செயல்படுத்தப்படாத திட்டங்கள்!**

இதை சொல்லுகின்ற நேரத்தில், 2015ஆம் ஆண்டு அறிவித்து, இன்றைக்கு வரைக்கும் மதுரைக்கு மத்தியில் இருக்கக்கூடிய ஒன்றிய பா.ஜ.க அரசால் கொண்டு வரப்படாத ஒரு திட்டம் இருக்கிறதே, அது உங்கள் ஞாபகத்திற்கு வந்தால், அதுக்கு நான் பொறுப்பில்லை!

இந்த அரங்கத்தை கம்பீரமாகவும், அழகாகவும் அமைத்துக் கொடுத்த பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்! அவருடைய





முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சாதனைப் பட்டியலில், இப்போது இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கமும் சேர்ந்துவிட்டது.

சென்னையில், கலைஞர் நினைவகமும் விரைவில் திறக்கப்பட இருக்கிறது. இந்த விழாவை மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்துள்ளார் நம்முடைய அமைச்சர் மூர்த்தி அவர்கள்.

தை மாதம் பிறந்தாலே மூர்த்தி, ஜல்லிக்கட்டு மூர்த்தியாக மாறிவிடுவார். கோட்டைக்கு கூட வராமல் ஜல்லிக்கட்டு மைதானத்திலேயே இருந்துவிடுவார். அந்தளவுக்கு ஏறுதழுவுதலை தனது உயிராகக் கருதக் கூடிய மூர்த்தியை நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

**தமிழினத்தின் பண்பாட்டு மரபின் தொடர்ச்சி இந்த விழா!**

இங்கே அமைந்திருக்கும் இந்த பண்பாட்டுச் சின்னம், தமிழினத்தின் பண்பாட்டு மரபின் தொடர்ச்சி! சிந்து சமவெளி காலத்து முத்திரை களிலேயே திமில் காளைகள் இருக்கிறது. அதில் காளைகளின் நேர்கொண்ட பார்வையை நாம் பார்க்கலாம்.

பல்லாயிரம் ஆண்டுக்கு முன்பிருந்த ஓவியங்களில், திரண்டு தொங்கும் தாடை, அகன்று வளைந்த கொம்பு கொண்ட காளைகள் இருக்கிறது! ஏன், கீழடியில் திமிலுள்ள காளை யின் முழு எலும்புக் கூடு கிடைத்திருக்கிறது! முல்லை நில மக்களுடைய வீர விளையாட்டாக இருந்திருக்கிறது! பழந்தமிழ் இலக்கி யங்களிலும் இதைப் பற்றி உயர்வாக பாடப்பட்டி ருக்கிறது.

**பல்லாயிரம் ஆண்டு பெருமை கொண்ட நம்முடைய தமிழினம் கொண்டாடும் ஏறுதழுவுதலுக்கான அரங்கத்தைக் கட்டி எழுப்பியவன் இந்த ஸ்டாலின் என்று வரலாற்றில் என்னுடைய பெயர் இடம்பெறுவது எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய பெருமை!**

“எழுந்தது துகள் ஏற்றனர் மார்பு கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர் என்று ஏறுதழுவுதல் காட்சியை நம்முடைய கண்முன்னே கொண்டு வருவது கலித்தொகை. தை மாதம் தொடங்கி பொங்கலுக்காக முதல் மூன்று நாள், அரசு கருவூலத்தை தவிர மற்ற பொது அலு வலகங்களை மூடவேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் கவர்னர் அறிவித்திருக்கிறார்.

தமிழர்களின் பண்பாட்டை சரியாக அறிந்தவர்களாக, அந்தக் காலத்து கவர்னர்கள் இருந்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் தை மாதம் ஏறுதழுவுதல் நடக்கும்போது அலங்கா நல்லூரும், அவனியாபுரமும், பாலமேடும் உற்சாகத்தோடு காணப்படும்!

**உயர்நீதிமன்றத் தடையை நிறுத்தி 1974-ல் அனுமதி பெற்ற கலைஞர்!**

இந்த பண்பாட்டுத் திருவிழா உலகம் முழுவதும் பேசப்படும் என்று தான், இந்த அரங்கத்தை அமைக்கின்ற முடிவை எடுத்தோம்.

தலைவர் கலைஞருக்கு ஏறுதழுவுதல் போட்டி மேல், தனி பாசம் உண்டு! அதனால்தான், தன்னுடைய மூத்த பிள்ளையான முரசொலியின் சின்னமாக, ஏறுதழுவுதல் காட்சியை வைத்தார்.

1974ஆம் ஆண்டு சனவரி மாதம் சென்னையில் ஏறுதழுவுதல் போட்டிகளை நடத்தியவர் கலைஞர். ஜல்லிக்கட்டு, ரேக்ளா ரேஸ் போன்றவற்றை 2006ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை தடை செய்தபோது, பாதுகாப்பான முறையில் நாங்கள் நடத்துவோம் என்று உறுதி அளித்து, அனுமதியை பெற்றவர் தலைவர் கலைஞர்.

2007ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம், ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்தபோதும், தடையை நீக்குவதற்காக வலுவான வாதங்களை வைத்து வாதாடியதும் போட்டிகள் நடத்தலாம் என்று அனுமதியைப் பெற்றதும் கழக ஆட்சியில்தான்.

ஆட்சி மாறியதும், 2014ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு நடத்த முடியாத சூழல் வந்தது. நம்முடைய இளைஞர்கள் சேர்ந்து, ‘மெரினா தமிழர் புரட்சி’ என்று சொல்கின்ற அளவிற்கு 2017ல் மிகப்பெரிய மக்கள் போராட்டம் சென்னைக் கடற்கரையில் நடந்தது.

அமைதி வழியில் போராடியவர்கள் மேல் வன்முறையை ஏவி கூட்டத்தை கலைத்தது அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. ஆட்சி. அவர்களே ஆட்டோக்களுக்கு தீ வைத்து கொளுத்தி, அந்த கொடுமையான காட்சி யெல்லாம் அப்போது வெளியானது!

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## எ.வ.வேலுவின் சாதனைகளை - மூர்த்தியின் விழா ஏற்பாட்டைப் பாராட்டுகிறேன்!





**இந்த அரங்கத்தை கம்பீரமாகவும், அழகாகவும் அமைத்துக் கொடுத்த பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்! அவருடைய சாதனைப் பட்டியலில், இப்போது இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கமும் சேர்ந்துவிட்டது.**

**சென்னையில், கலைஞர் நினைவகமும் விரைவில் திறக்கப்பட இருக்கிறது. இந்த விழாவை மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்துள்ளார் நம்முடைய அமைச்சர் மூர்த்தி அவர்கள். தை மாதம் பிறந்தாலே மூர்த்தி, ஜல்லிக்கட்டு மூர்த்தியாக மாறிவிடுவார். கோட்டைக்கு கூட வராமல் ஜல்லிக்கட்டு மைதானத்திலேயே இருந்துவிடுவார். அந்தளவுக்கு ஏறுதழுவுதலை தனது உயிராகக் கருதக் கூடிய மூர்த்தியை நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!**

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 26-01-2024

# வழிபாடு அல்ல, பழிபோடு !

ஆளுநராக வந்ததில் இருந்து குழப்பம் செய்வதையே தொழிலாகச் செய்து வருகிறார் ஆர்.என்.ரவி. பதவிப் பிரமாணத்தோடு அவர் எடுத்துக் கொள்ளும் ரகசியக் காப்புப் பிரமாணம் என்பது தமிழ்நாட்டில் குழப்பம் ஏற்படுத்துவதாக மட்டுமே அமைந்துள்ளது.

அயோத்தியில் ராமர் கோவில் புதிதாகக் கட்டித் திறக்கப்படுகிறது. அந்த விழாவைப் புறக்கணித்து விட்டு (!) மேற்கு மாம்பலத்துக்கு ஆளுநர் வர வேண்டிய அவசியம் என்ன வந்தது? அயோத்திக்குப் போய்விட்டால், தமிழ்நாடு அமைதியாக இருந்துவிடும் அல்லவா? அதனால்தான், ஆளுநர் மேற்கு மாம்பலம் வருகிறார். வந்தவர் அமைதியாக கோதண்டராமரை வணங்கி விட்டுச் சென்றிருக்க வேண்டும். அவர் வந்த நோக்கம், வழிபாடு அல்ல. பழிபோடு என்பது ஆகும்.

**இவர் வந்தபோது அர்ச்சகர்கள் மிரண்டு போய் காணப்பட்டார்களாம். உடனடியாக செய்தி வெளியிடுகிறார் ஆளுநர். இவரைப் பார்த்து அர்ச்சகர்கள் எதற்காக பயப்பட வேண்டும்? எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை என்பதை அர்ச்சகர்களே பேட்டியாக ஊடகங்களில் கொடுத்து விட்டார்கள்.**

சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள அருள்மிகு கோதண்டராமர் திருக்கோவிலுக்கு தான் சென்றதாகவும் அப்பொழுது அங்குள்ள பூசாரிகள் மற்றும் கோயில் ஊழியர்களின் முகங்களில் கண்ணுக்குப் புலப்படாத பயம் மற்றும் மிகப்பெரிய அச்ச உணர்வு இருந்ததாகவும், நாடு பாலராமர் பிராண பிரதிஷ்டை கொண்டாடும் பொழுது கோயில் வளாகம் கடுமையான அடக்குமுறை உணர்வு வெளிப்படுத்துகிறது என்றும் ஆளுநர் ரவி சமூக வலைதளத்தில் பதிவிட்டு இருந்ததற்குப் பின்னணி என்பது, இதன் மூலமாக தமிழ்நாடு அரசின் மீது பழிபோடுவதுதான்.

ஆளுநர் சொன்ன சில நிமிடங்களிலேயே மேற்கு மாம்பலம் கோதண்டராமர் திருக்கோவில் தலைமை அர்ச்சகர் மோகன் பட்டாச்சாரியார் இதற்கு சரியான விளக்கத்தைச் சொல்லி விட்டார்.

**“இன்று காலை 8 மணியளவில் ஆளுநர் அவர்கள் கோவிலுக்கு வருகை புரிந்தார். அப்போது கோபுர வாசல் அருகே அவருக்கு பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டு, சுவாமி தரிசனம் சிறப்பாக செய்து வைக்கப்பட்டது. கோவிலின் தலப்புராணமும், கோவிலில் எழுந்தருளியுள்ள எம்பெருமாள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. ஆளுநர் பிரசாதங்கள் பெற்றுக்கொண்டு மகிழ்வுடன் சென்றார். சுமார் 20நிமிடம் சுவாமி தரிசனம் செய்தார்கள். இன்று விசேஷ தினம் என்பதால் நேற்று அர்ச்சகர்கள் யாரும் தூங்கவில்லை. சுவாமிக்கு சிறப்பு அலங்காரம், புஷ்ப அலங்காரம் செய்யவேண்டியிருந்தது. அதன் காரணமாக ஒரு நிமிடம் கூட நாங்கள் ஓய்வெடுத்து படுக்கவில்லை. பிரசாதங்கள் எல்லாம் செய்து சுவாமிக்கு பூஜைகள் முடித்து ஆளுநர் வருகைக்காக தயாராக இருந்தோம். சரியான தூக்கமில்லை என்பதால் அசதியாக இருந்தது. இப்போது கூட சோர்வை எங்கள் முகத்தில் பார்க்கலாம்” என்று சொல்லி இருக்கிறார் தலைமை அர்ச்சகர்.**

“அர்ச்சகர்கள் குறித்து X தளத்தில் ஆளுநர் பதிவிட்டது குறித்து கேள்விப்பட்டோம். ‘அர்ச்சகர்கள் வாடிய முகத்துடன் இருப்பதாக’ பதிவிட்டுள்ளதாக கேள்விப் பட்டோம். நாங்கள் பூஜையிலுள்ளோம். தூக்கமின்மையால் அவர் அப்படி தெரிவித்திருக்கலாம். மற்ற படி யாரும் எதுவும் சொல்லவில்லை. யாரும் அச்சுறுத்தவில்லை. அவருடைய (ஆளுநரின்) பாதுகாவலர்கள் சொன்னபடி நடந்து கொண்டோம். அவ்வளவுதான்” என்று விளக்கம் அளித்துள்ளார்.

‘என்னை கிள்ளிட்டான் மிஸ்’ என்று பள்ளிச் சிறுவர்கள் சொல்வதைப் போல இருக்கிறது ஆளுநரின் குற்றச்சாட்டு. ராமருக்கு எதிராக தி.மு.க. அரசு இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கி குழப்பத்தை ஏற்படுத்துவதுதான் இவரது நோக்கம். ஆளுநர், அயோத்திக்குப் போகாமல் இருந்ததும், மேற்கு மாம்பலம் வந்ததும் இதற்குத் தானா?

இவர்கள் எல்லாம் உண்மையில் பதில் சொல்ல வேண்டியது பூரி சங்கராச்சாரியாருக்குத்தான். ஆன்மிகப் பெரியவர்கள் சிலர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லி விட்டு, தமிழ்நாடு அரசைப் பார்த்து கேள்வி எழுப்பட்டும். குறை சொல்லட்டும்.

**ஆதி சங்கராச்சாரியார் நிறுவிய மடங்களில் ஒன்றான பூரியில் உள்ள கோவர்த்தன பீடத்தின் சங்கராச்சாரியார் அவர்கள், “அயோத்தியில் நடக்கும் நிகழ்ச்சிக்கான அழைப்பை எங்கள் மடம் பெற்றுள்ளது, அதில் நான் அங்கு வர விரும்பினால், அதிகபட்சமாக ஒருவருடன் வரலாம் என்று கூறுகிறது. 100 பேருடன் அங்கு இருக்க அனுமதித்திருந்தாலும், அன்று நான் அங்கு சென்றிருக்க மாட்டேன்” என்று சொல்லி இருக்கிறார். ஆளுநர் வகையறா இதற்குப் பதில் சொல்லத் தயாரா?**

**“நான் கடந்த காலத்தில் அயோத்திக்குச் சென்று வந்திருக்கிறேன், மேலும் எதிர்காலத்தில் ராமரை தரிசனம் செய்வதற்காக அதே மத நகரத்திற்குச் செல்வேன், குறிப்பாக பல நூற்றாண்டுகளாக தடைப்பட்ட வேலை இறுதியாக நடந்து கொண்டிருக்கிறது. இருப்பினும், கோவிலில் ராம் லல்லா சிலையை நிறுவுவது சாஸ்திர விதிகளின்படி (நமது சாஸ்திரங்களின் கோட்பாடுகள்) செய்யப்பட வேண்டும். கோவர்தன் பீடம்/மட்டத்தின் அதிகார வரம்பு பிரயாகை வரை பரவியுள்ளது, ஆனால் ஜனவரி 22 மதப் பயிற்சி முழுமைக்கும் எங்களின் ஆலோசனையோ அல்லது வழிகாட்டுதலோ பெறப்படவில்லை. மோடி, சிலையைத் தொட்டு அங்கு நிறுவும் போது, நான் கைதட்டிக் கொண்டு இருக்க முடியாது” என்று அவர் சொல்வதற்கு இவர்கள் பதில் சொல்லி இருக்க வேண்டும்.**

**ஜோதிர்பீடத்தின் தலைவரும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளார். ஜோதிர் மடத்தின் 46வது சங்கராச்சாரியார் அவிமுக்தேஷ்வரனந்த் சரஸ்வதி தனது வீடியோவில், “நாங்கள் சொல்வது மோடிக்கு எதிரானது அல்ல. அல்லது வெறுப்பின் காரணமாக அல்ல, மாறாக சாஸ்திர விதியை ( சாஸ்திரங்களின் சடங்குகள் ) பின்பற்றுவதும், அவை பின்பற்றப்படுவதை உறுதி செய்வதும் சங்கராச்சாரியார்களின் கடமையாகும். இங்கு சாஸ்திர விதி புறக்கணிக்கப்படுகிறது. கோவில் முழுமையடையாத நிலையில் பிரான் பிரதிஷ்டா (கும்பாபிஷேகம்) நடப்பது மிகப்பெரிய பிரச்சினை,” என்றார். “இதைச் சொன்னால், நாம் ‘மோடி எதிர்ப்பு’ என்று அழைக்கப்படுகிறோம்” என்றார். இதற்கு பதில் சொல்லத் தயாரா?**

இவர்கள் ஆன்மிகத்துக்கு எதிரானவர்களா? இவர்களை இந்து விரோதிகள் என்று சொல்லி விடுவீர்களா?

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரையில் ரூ.62.78 கோடியில் கட்டப்பட்டுள்ள

# உலகின் முதல் பிரம்மாண்டமான “கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்”!

## முத்தமிழறிஞர் கலைஞர் சிலை – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு தங்க மோதிரம் வழங்கி பாராட்டினார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மதுரை, ஜன.26-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்துடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.**

தமிழ்ச் சமுதாயத்தின் முக்கிய பண்பாட்டுத் திருவிழாவான பொங்கல் விழாவின்போது, தமிழ்நாடு முழுவதிலும் காளையை இளைஞர்கள் அடக்கும் வீரத்தைப் புலப்படுத்தும் ஜல்லிக்கட்டு விழா நடைபெற்று வருகிறது. தமிழர்தம் வீரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்திடும் வகையில் “அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்கென்றே தனியாக பிரம்மாண்டமான மைதானம் அமைக்கப்படும்” என்று முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110 ன் கீழ் 21.4.2022 அன்று அறிவிப்பு வெளியிட்டார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில் ஏறுதழுவுதல் போட்டிகளுக்கென ஒரு பிரம்மாண்டமான அரங்கத்தினைக் கட்டுவதற்காக 3.2.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கென 62 கோடியே 78 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

அதன்படி, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, நவீன வசதிகளுடன் உலகத்தரத்துடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில்:

### வாடிவாசல்

வாடிவாசல் வழியாக காளைகள் அடக்கி பிடிக்கும் பகுதிக்கு விடப்படுகின்றன. இங்கு காளைகள் மற்றும் விளையாட்டு அமைப்பாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 6 மீட்டர் நீளமுள்ள வாடிவாசலின் சுவற்றில் ஜல்லிக்கட்டின் சிறப்பினை விளக்கிடும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன,

### 5000 பார்வையாளர்கள் அமரும் மூன்றடுக்கு மாடம்

இந்த அரங்கில், அரை வட்ட வடிவிலான இருக்கை கொண்ட மூன்றடுக்கு பார்வையாளர் மாடங்கள், தரைமட்ட அளவிலான இருக்கையும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சுமார் 50 நபர்கள் அமரும் வகையில் குளிரூட்டப்பட்ட பார்வையாளர் மாடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### காளைகள் காத்திருப்பு மற்றும் தயார்நிலை கூடம்

வாடிவாசல் நுழையும் முன் காளைகள் காத்திருப்பதற்காக இப்பகுதி பயன்படுத்தப்படுகிறது. இப்பகுதியில் ஒரே நேரத்தில் 300 காளைகள் காத்திருக்கும் வகையில் 10,850 சதுர அடி பரப்பளவில் தேவையான தடுப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளது,

### காயமடைந்த காளைகளுக்கு சிகிச்சைக்கு கால்நடை மருந்தகம்!

காயமடைந்த காளைகளுக்கு அவசர மருத்துவ சிகிச்சை அளித்திடும் வகையில் 1676 சதுர அடி பரப்பளவில் கால்நடை மருந்தகம் ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

### காயமடைந்த வீரர்களுக்கு சிகிச்சை அளித்திட துணை சுகாதார நிலையம்

காயமடைந்த வீரர்களுக்கு உடனடியாக அவசர மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் 853 சதுர அடி பரப்பளவில் துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏறுதழுவுதல் போட்டி நடைபெறும்போது அவசர மருத்துவ உதவிக்காக 10 அவசரகால ஊர்திகள் இம்மையத்தின் அருகிலேயே நிறுத்தி வைக்கப்படும்.

### அருங்காட்சியகம் 1

சிந்து சமவெளி நாகரிகம் முதல் சமகாலம் வரை காளைகள் மற்றும் காளை விளையாட்டுகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் 3,390 சதுர அடி பரப்பளவிலான குளிருட்டப்பட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில், பண்டைய சங்க கால இலக்கியங்களில் நடந்த காளைகள் மற்றும் காளை விளையாட்டுகள் தொடர்பான சிற்பங்கள், சுவரோவியங்கள், ஓவியங்கள், புகைப்படங்கள், கல்வெட்டுகளின் பிரதிகள் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் நிறைந்துள்ளன.

### அருங்காட்சியகம் 2, நூலகம் மற்றும் ஒலி – ஒளி காட்சிக்கூடம்

காளைகள் மற்றும் காளை வளர்ப்பவர்களின் உணர்வுபூர்வமான பந்தத்தை பறைசாற்றும் வகையில் 3,821 சதுர அடி பரப்பளவில் ஒரு குளிரூட்டப்பட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கலைப் பின்னணியுடன் காளை ரைடருடன் (Bull Rider) குழந்தைகள் விளையாடுவதற்கு ஒரு தனிப் பகுதியும், காளை / மாடுபிடி விளையாட்டுகளைப் பற்றிய புத்தகங்கள் மற்றும் பிற இலக்கிய ஆதாரங்களின் நகல்களின் விரிவான தொகுப்புகளுடன் ஒரு பிரத்யேக நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அரிய பனை ஓலைக் கல்வெட்டுப் பிரதிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. காளை விளையாட்டுகள் பற்றிய காட்சிப்படத்தை காண 100 பேர் அமரக்கூடிய ஒலி, ஒளி காட்சிக்கூடமும் அமைக்கப்பட்டுள்ளன.

கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில், முக்கிய பிரமுகர்கள் மாடம், ஓய்வறைகள், நிர்வாக அலுவலகம், ஊடகவியலாளர்கள் கூடம், தற்காலிக விற்பனை கூடம், கழிவறைகள், பொருட்கள் வைப்பறை, மாடுபிடி வீரர்கள் தங்கும் மற்றும் உடை மாற்றும் அறை, மின் தூக்கிகள், தீயணைப்பு வசதிகள் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், பிரதான முகப்பு நுழைவு வாயில், உட்புற தார் சாலை வசதிகள், மழைநீர் வடிகால் வசதி, புல் தரை, 50 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை மற்றும் தரைதள நீர்த்தேக்க தொட்டிகள், இரண்டு

ஆழ்குழாய் கிணறுகள், காளைகள் உரிமையாளர்கள் ஓய்விடம், தற்காலிக விற்பனை கூடம், 85,000 சதுர அடிபரப்பளவில் இயற்கையை பிரதிபலிக்கும் வண்ணம் பலவகையான வண்ணங்களுடன் கூடிய செடிகள் கொண்ட தோட்டம் என பல்வேறு வசதிகளுடன் பொதுப் பணித்துறையின் மூலம் இந்த அரங்கம் கட்டப்பட்டுள்ளது.

உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, அங்கு நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் ஏறுதழுவுதல் சிலையை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏறுதழுவுதல் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து, பார்வையிட்டார். ஏறுதழுவுதல் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு தங்க மோதிரம் வழங்கி பாராட்டினார்.

இத்திறப்பு விழாவில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர் கல்வித் துறை அமைச்சர் ஆர். எஸ்.ராஜகண்ணப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.வெங்கடேசன், திருமதி. தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, காதர்பாட்சா முத்துராமலிங்கம், ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், முருகேசன், திருமதி.தமிழரசி, அப்துல் வகாப், காந்திராஜன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாடுபிடி வீரர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் உதகை மத்திய பேருந்து நிலையத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் இணைந்து உதகை முதல் தஞ்சாவூர் வரை புதிய வழித்தட பேருந்து இயக்கத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். கணேஷ் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உள்ளனர்.

படகும், தைரியமும், துணிச்சலும்தான் மீனவர்களுக்கு வாழ்வாதாரம்!

# ‘திராவிட மாடல்’ அரசு மீனவர்களுக்கு என்றும் துணை நிற்கும்!

## ‘மிக்ஜாம்’ பேரிடர் மீட்புப் பணியில் ஈடுபட்ட மீனவர்களுக்கான பாராட்டு விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜன.26 -**

**“திராவிட மாடல் அரசு என்றும் மீனவர்களுக்குத் துணை நிற்கும்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மிக்ஜாம் பேரிடர் மீட்புப் பணிகளில் ஈடுபட்ட மீனவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசும்போது உறுதிபடக் கூறினார்.**

**சென்னை, ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நேற்று முன்தினம் (புதன்கிழமை) காலை, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் மிக்ஜாம் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் ஈடுபட்ட 1,200 மீனவர்களுக்கு பரிசுப் பொருட்கள் சான்றிதழ் வழங்கி, பாராட்டும் விழா நடைபெற்றது.**

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற இந்த விழாவில் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மீனவர்களுக்கான பரிசுப் பொருள், சான்றிதழ் வழங்கி பேசினார்.**

அப்போது அவர் பேசியதாவது : -

“சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் பெய்த கனமழையின்போது பாதிக்கப்பட்ட மக்களை மீட்பது, அவர்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்க அரசுக்கு உறுதுணையாக இருந்த மீனவர் களுக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தப் பாராட்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

சென்னை பகுதிகளில் மட்டுமல்ல, தென் மாவட்டங்களான தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் பெரும் கனமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின்போது, மீட்பு பணிகளை மேற்கொண்டவர்கள், மீனவர் நண்பர்களாகிய நீங்கள்தான்.

இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் ஒட்டுமொத்த வட சென்னையும் ஒட்டு மொத்த சென்னையும் உங்களைப் பாராட்ட வந்திருக்கிறது. நான் உட்பட நான்கு அமைச்சர்கள், மேயர், ஐந்து சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படி அத்தனைப்பேரும் உங்களைப் பாராட்டுவதற்காக, வாழ்த்துவதற்காக வந்திருக்கிறோம் என்றால் இது எவ்வளவு முக்கியமான நிகழ்ச்சி என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

### கூடுதல் பெருமை, கூடுதல் மகிழ்ச்சி!

சில நாட்களுக்கு முன்பு தூத்துக்குடியில் தென் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ மக்களுக்குப் பாராட்டு விழா நடந்தது. அதைத் தொடர்ந்து இன்றைக்குச் சென்னையில் பாராட்டு விழா நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் பெருமை என்னவென்றால், என்னுடைய சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியில் இந்தப் பாராட்டு விழா நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. அதிலே எனக்குக் கூடுதல் பெருமை, கூடுதல் மகிழ்ச்சி. ஏனென்றால், எங்களுடைய தொகுதியில் நிறைய மீனவ மக்கள் இருக்கிறார்கள்.

மழைவெள்ள நேரத்தில் சென்னையின் பல்வேறு பகுதிகளுக்கு அந்தப் படகுகளை எடுத்துச்சென்று, மீட்பு பணிகளில் ஈடுபட்டவர்கள். நீங்கள் அத்தனை பேரும் இங்கே வந்திருக்கிறீர்கள் என்றால், உங்கள் அத்தனை பேருக்கும் முதலில், என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### யாரும் வீட்டில் ஒளிந்து கொண்டு இல்லை!

வெள்ளநேரத்தில் முதலமைச்சராக இருக்கட்டும், இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்களாக இருக்கட்டும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கட்டும், மேயராக இருக்கட்டும், அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் மக்களைப் போய்ச் சந்தித்தோம். யாரும் வீட்டில் ஒளிந்துகொண்டு இல்லை. வீட்டிற்கு உள்ளே சென்று பூட்டிக்கொண்டும் இல்லை.

எல்லோரும் களத்தில் இறங்கி, மக்களோடு மக்களாக நின்றோம். எந்தத் தைரியத்தில் நின்றோம் நீங்கள் எங்களுக்குத் துணை நிற்பீர்கள், மீட்பு பணியில், நீங்கள் எங்களுக்குத் துணை நிற்பீர்கள் என்ற அந்த தைரியத்தில் தான் நாங்கள் சென்று மக்களிடம் நின்றோம். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய அன்பும் நன்றியும்.

பொதுவாக, நாம் யாராவது போய் உதவி என்று கேட்டால்தான் உதவி செய்ய வருவார்கள். ஆனால், மீனவ நண்பர்களாகிய நீங்கள்தான் உதவி கேட்பதற்கு முன்னாடியே அதைப் புரிந்துகொண்டு உங்களுடைய படகுகளை எடுத்துக் கொண்டு வந்து களத்தில் முதலில் நின்றீர்கள். அதனால் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பாராட்டு விழாவை நடத்த வேண்டுமென்று, எங்களுக்கு ஆணையிட்டு, நாங்கள் இதை நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

### மீனவர் நலன் மீது தனி அக்கறை!

மீனவர்களுடைய நலன் மீது நமது அரசுக்கு எப்பொழுதுமே தனி அக்கறை உண்டு. மீனவர்களுக்கும் கழகத்தின் மீது மிகப்பெரிய அளவில் ஒரு நம்பிக்கை இருக்கிறது. இந்த மழைவெள்ளத்தில் மட்டுமல்ல, ஒவ்வொரு மழை வெள்ளத்திலும் உயிரைப் பணயம் வைத்துப் போய் மக்களை மீட்டுக் கொண்டு வருவது நீங்கள்தான். இப்போது மட்டுமல்ல 2015லும் இதே மாதிரி ஒரு மிகப்பெரிய வெள்ளம் வந்தது. அப்போதும் மீனவ நண்பர்களான நீங்கள்தான் களத்தில் இறங்கி மக்களைக் காப்பாற்றினீர்கள்.

தற்போது, நம்முடைய திராவிட மாடல் அரசு இரண்டு இடங்களில் இந்தப் பாராட்டு விழாவை நடத்தி, மீனவ நண்பர்களைக் கௌரவித்துள்ளது. மீனவ மக்களிடம் எனக்கு மிகவும் பிடித்த விஷயம் என்னவென்றால், நேர்மையும் துணிச்சலும்தான். ஒரு விஷயம் தப்பென்றால் தப்பு என்றும், சரி என்றால் சரி என்றும் சொல்கின்ற முதல் ஆள் நீங்கள்தான். எதற்கும் கவலைப்படமாட்டீர்கள், யாருக்கும் பயப்பட மாட்டீர்கள். உங்களை நம்பி வந்தால், அது எவ்வளவு பெரிய விஷயமாக இருந்தாலும், நம்பி வந்தவர்களைத் தோளோடு தோள் நின்று காப்பாற்றுபவர்கள்தான் மீனவ நண்பர்களாகிய நீங்கள்.

இங்கே இருக்கக்கூடிய அமைச்சர் அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் கால்நடை, மீன்வளம் மற்றும் மீன்வளத் துறைக்கு அமைச்சர். இன்றைக்கு மிக மிக முக்கியமான நாள். இன்றைக்கு அவர் மதுரையில் இருந்திருக்க வேண்டும். முதலமைச்சர் மதுரையில் `ஜல்லிக்கட்டு ஏறுதழுவுதல்’ அரங்கத்தைத் திறந்திருக்கிறார். ஆனால், அந்த விழாவுக்குப் போகாமல் இன்றைக்கு உங்களை வந்து பார்த்திருக்கிறார் என்றால், இந்த நிகழ்ச்சி எவ்வளவு பெரிய முக்கியமான நிகழ்ச்சி என்று நீங்கள் உணர வேண்டும்.

**இந்த அரசு மீனவர்கள் நலன் மீது அக்கறை கொண்ட அரசு மட்டுமல்ல, மீனவர்களுடைய மனதை, உணர்வை உணர்ந்த அரசு. அதனால்தான் கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஏராளமான நலத்திட்டங்களை மீனவர்களுக்காக கழக அரசு நிறைவேற்றி இருக்கிறது.**

- **மீனவர்கள் நல வாரியத்தின் உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடைகின்ற பொழுது அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ரூபாய் 15,000 என்று இருந்த நிவாரணத் தொகையை உயர்த்தி, ரூபாய் 25,000 ஆக நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள்.**
- **மீன்வள படிப்பில் இட ஒதுக்கீட்டை 20 சதவிகிதமாக உயர்த்தினார் கழகத் தலைவர்.**
- **மீன்பிடி படகுகளுக்கு உரிமை வழங்கும் காலம் ஒரு வருடத்தில் இருந்து மூன்று வருடமாக நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் உயர்த்திக் கொடுத்தார்கள்.**
- **தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை மீன்வளம் படிப்பில் சேருகின்ற மாணவர்களுக்கு 5 சதவிகிதம் இருந்த இட ஒதுக்கீட்டை 20 சதவிகிதமாக உயர்த்தியது நம்முடைய கழக அரசு.**
- **இந்திய ஒன்றியத்தில் எந்த அரசுமே செய்யாத ஒரு விஷயம், ராமநாதபுரத்தில் மிகப்பெரிய மீனவர்கள் மாநாட்டை கடந்த ஆகஸ்ட் மாதம் நடத்தியதுடன், நம்முடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதில் சிறப்பு விருந்தினராகப் பொறுப்பேற்றார்.**
- **அந்த மாநாட்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பில் மூன்றை மட்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். மீன்பிடித் தடைக்கான நிவாரணத் தொகை, ரூபாய் ஐந்தாயிரம் இருந்தது. அதை 8 ஆயிரமாக உயர்த்திக் கொடுத்தவர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**
- **அதேபோல் நாட்டுப் படகுகளுக்கு வழங்கப்படுகின்ற மானிய விலை மண்ணெண்ணெயின் அளவை ஆண்டுக்கு 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்டராக உயர்த்திக் கொடுத்தார்.**
- **நாட்டுப் படகுகளுக்கு வழங்கப்படுகின்ற வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசல் அளவில், ஆண்டுக்கு 4,000 லிட்டரிலிருந்து நாலாயிரத்து நானூறு லிட்டராக உயர்த்திக் கொடுத்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.**
- **அது மட்டுமல்ல, விசை படகுகளுக்கு 18,000 லிட்டரிலிருந்து 19,000 லிட்டராக உயர்த்திக் கொடுக்கவும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் உத்தரவிட்டார்.**

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மதுரையில், அலங்காநல்லூரில் சுமார் 46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள `கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல்’அரங்கத்தை இன்றைக்குத் திறந்து வைத்திருக்கிறார்கள். மீனவர்களைப் பாராட்டுகின்ற நிகழ்ச்சியில், ஏன் நான் ஜல்லிக்கட்டு பற்றிப் பேசுகிறேன் என்று உங்களில் சில பேருக்கு வியப்பாக இருக்கும். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

### மீனவர்களும் ஜல்லிக்கட்டுப் போராட்டமும்

2017 ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுப் போராட்டம் தமிழ்நாடு முழுவதும் நடந்தது. அப்போது, மாணவர்கள், இளைஞர்கள் தெருவில் இறங்கி, போராடினார்கள். குறிப்பாக கடந்த 25 வருடத்தில் தமிழ்நாட்டில், இல்லை, இல்லை... இந்தியாவிலேயே இவ்வளவு பெரிய போராட்டம் நடந்தது என்றால், அது நம்முடைய ஜல்லிக்கட்டுப் போராட்டம்தான்.

அப்போது இருந்த ஆட்சியாளர்கள் போராட்டத்தை ஒடுக்க நினைத்த போது, மாணவர்கள், இளைஞர்களுக்கு ஆதரவாக நின்றது, நம்முடைய மீனவர்கள்தான். ஜல்லிக்கட்டுக்காக மாணவர்கள் போராடினா;ர்கள். ஆனால், இந்த மாணவர்களுக்காக மீனவ நண்பர்கள்தான் போராடினீர்கள். அன்று நீங்கள் செய்த தியாகங்கள் கொஞ்சம் நஞ்சம் இல்லை. தமிழர் பண்பாடு, தமிழர் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு உள்ளவரை மீனவர்கள் உங்களுடைய புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்.

வெள்ளத்தில் சிக்கிய மக்கள் அரசிடம் கேட்கின்ற முதல் உதவி, உணவோ, மருந்தோ கிடையாது. ``எங்களுக்கு ஒரு படகு வேண்டும். எங்களை எப்படியாவது இங்கிருந்து வெளியில் கூட்டிக்கொண்டு போய் காப்பாற்றி விடுங்கள்” என்பதாகத்தான் இருந்தது. அந்த நேரத்தில் மீனவர்கள் உங்களுடைய வாழ்வாதாரமான, அந்தப் படகுகளைக் கொண்டு வந்து, லாரியிலும், டிராக்டர்களிலும் ஏற்றிக் கொண்டு வந்து, நீங்கள்தான் தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்றி இருக்கிறீர்கள்.

### ஒரு மாதம் களத்திலேயே மக்கள் பணி!

படகும், தைரியமும், துணிச்சலும் தான் மீனவர்களுக்கு வாழ்வாதாரம். படகு உடைந்தாலும் பரவாயில்லை என்று நீந்தி சென்றும் மக்களைக் காப்பாற்றி இருக்கிறீர்கள். நிவாரணப் பொருட்கள் நாங்கள் ஏற்பாடு செய்திடுவோம். பால், பிஸ்கட், தண்ணீர், உணவு எல்லாவற்றையும் தயார் பண்ணி விடுவோம். ஆனால், இதை எப்படிக் கொண்டு சென்று மக்களிடம் சேர்ப்பது. சேர்க்க வேண்டும் என்றால், நீங்கள்தான் அதற்கு முன்னால் நின்றீர்கள். உங்களுடைய உதவி இல்லாமல் எங்களுடைய அரசு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நிவாரணப் பொருட்களைக் கூட நாங்கள் மக்களிடம் சேர்க்க முடியாது. அதைக் கொண்டுபோய் சேர்த்தது நீங்கள் தான்.

தூத்துக்குடியில் நான் இருந்தேன். நம்முடைய அமைச்சர் அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் இருந்தார்கள். அக்கா கீதா ஜீவன் இருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அத்தை கனிமொழி கருணாநிதி என ஒரு மாதம் களத்திலேயே நின்று மக்கள் பணியாற்றி இருக்கிறோம் . இந்த மழை வெள்ள காலத்தில் அரசுக்கு ஒரு நல்ல பெயர் கிடைப்பதற்கு உங்களுடைய பங்களிப்பு மிக மிக முக்கியம்.

நிலைமையைப் புரிந்து கொண்டு மக்கள்தான் முக்கியம் என அரசுக்குத் துணை நின்றீர்கள். இங்கே நிறைய அரசு அலுவலர்கள் துறை அதிகாரிகள் அத்தனை பேரும் வந்திருக்கிறீர்கள். வெள்ளம் சூழ்ந்த நாட்களில் வீட்டுக்கே செல்லாமல் களத்தில் நின்று, நீங்கள் அத்தனை பேரும் பணியாற்றி இருக்கிறீர்கள். உங்களுடைய ஒருங்கிணைப்பு இல்லாமல், இந்த மீட்புப் பணிகள் மற்றும் நிவாரண பணிகள் சாத்தியமாகி இருக்காது. எனவே, உங்களுக்கும் என்னுடைய பாராட்டுகளையும் என்னுடைய அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர் வாழ்வில் மகிழ்ச்சி பெருகிடும் வண்ணம் பல்வேறு திட்டங்களை உங்களுடைய கோரிக்கைகளை எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார். அது தொடரும் என்ற உறுதிமொழியை இந்த நேரத்திலே தருகின்றேன்.

எனக்கு கடவுள் நம்பிக்கை கிடையாது. இதைச் சொன்னால் அண்ணன் சேகர்பாபு அவர்கள் கோபித்துக் கொள்வார். ஆனால், யார் உண்மையான கடவுள் என்றால், இன்னொருவரின் உயிரைக் காப்பாற்றுபவன்தான் உண்மையான கடவுள்.

அப்படிப் பார்த்தால், இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளுக்கு சமம். உங்கள் அத்தனை பேருக்கும் நிவாரணப் பொருட்கள், பரிசுப் பொருட்கள், வேட்டி, சேலை அனைத்தும் அரசின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் உங்களுக்கு இங்கே மதிய உணவும் தயார் செய்திருக்கிறார்.

எனவே, நீங்கள் அத்தனை பேரும் இங்கிருந்து மதிய உணவு சாப்பிட்டு விட்டு போக வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். நம்முடைய திராவிட மாடல் அரசு, எப்பொழுதுமே உங்களுக்குத் துணை நிற்கும் என்ற வாக்குறுதியை நான் உங்களுக்குக் கொடுத்து, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

மீன் வளம் மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்ரமணியன், பி.கே.சேகர்பாபு, சென்னை மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பி.சங்கர், ஐட்ரீம் மூர்த்தி, மயிலை வேலு, எபினேசர், பாலாஜி, சென்னை மாநகராட்சிப் பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, நகரமைப்புக் குழுத் தலைவர் இளைய அருணா, தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் தலைவர் கௌதமன், சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் மதன்மோகன், சென்னை மாநகராட்சி ஆளும் கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மீன்வளத்துறை ஆணையர் சிரு, நில நிர்வாக ஆணையாளர் பழனிசாமி, கழக நிர்வாகிகள் சுபேர்கான், பொன்னரசு, லட்சுமணன், சசிக்குமார், பிரகாஷ், எம்.கே.ஆனந்த், ஜி.வெங்கடேசன், உமரி சங்கர், மீனவர் நலவாரிய உறுப்பினர்கள், நிர்வாகிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், நேற்று முன்தினம் (24.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் படகுகளில் ஈடுபட்ட 1200 மீனவர்களுக்கு பரிசு பொருட்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர்/ ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, நில நிர்வாக ஆணையர் டாக்டர்.கே.சு.பழனிச்சாமி, நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில், தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்த திட்டத்தின்கீழ், 3வது மாவட்ட சுகாதார பேரவைக் கூட்டம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது. உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.இரா.மணி, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந்தாங்கி), ஒன்றியக்குழுத் தலைவர்கள் திருமதி.வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), வி.ராமசாமி (அன்னவாசல்), நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



செஞ்சி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மேல்மலையனூர் – சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு புதிய வழித்தடத்தில்பேருந்து சேவையைசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மூன்றாண்டு கழக ஆட்சியில் மதுரையில் மூன்று கம்பீரச் சின்னங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி!

தமிழ்நாடு முழுவதும் நடந்த போராட்டங்களுக்கு, அ.தி.மு.க. ஆட்சி அடிபணிந்தது. அதன் பிறகு தான் மீண்டும் ஏறுதழுவுதல் போட்டிகளை நடத்துகிற நிலை உருவானது. ஆனாலும், நிரந்தர தீர்வு எட்டப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் அனுமதி தருகிறோம் என்ற பெயரில் ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடகம் ஆடியது. ஆனாலும், உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டுதான் இருந்தது. அந்த வழக்கில், ஒன்றிய அரசு உச்சநீதிமன்றத்தில் என்ன சொன்னது தெரியுமா?

“ஜல்லிக்கட்டு, மாட்டு வண்டி பந்தயம் உள்ளிட்ட போட்டிகளை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. மாட்டுவண்டி பந்தயம், ஜல்லிக்கட்டு போட்டியை ஊக்குவிக்கும் திட்டமும் இல்லை. கிராமப்புற வீரர்களை ஊக்குவிக்கும், கேலோ இந்தியா உள்ளிட்ட எந்தத் திட்டத்தின் கீழும் ஜல்லிக்கட்டு இல்லை” என்று தெரிவித்தார்கள் ஒன்றிய அரசு தரப்பில்.

**திராவிட மாடல் அரசு உறுதியாக வாதாடி தீர்ப்பைப் பெற்றது!**

நமது திராவிட மாடல் அரசு நீதிமன்றத்தில் என்ன சொன்னது?

”ஜல்லிக்கட்டு வெறும் பொழுதுபோக்கு போட்டி இல்லை. அது உழவர்களின் வாழ்வோடும், பண்பாட்டோடும் கலந்தது. போட்டிகளை பாதுகாப்பாக நடத்துகிறோம். காளைகளை நமது குடும்பங்கள் கவனத்தோடு வளர்க்கிறோம்” என்று அழுத்தம் திருத்தமாக வாதங்களை வைத்தோம். திராவிட மாடல் அரசின் தீவிர முயற்சியால், ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை கடந்த ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் பெற்றோம்.

> **இந்த பண்பாட்டுத் திருவிழா உலகம் முழுவதும் பேசப்படும் என்றுதான், இந்த அரங்கத்தை அமைக்கின்ற முடிவை எடுத்தோம். தலைவர் கலைஞருக்கு ஏறுதழுவதல் போட்டி மேல், தனி பாசம் உண்டு! அதனால்தான், தன்னுடைய மூத்த பிள்ளையான முரசொலியின் சின்னமாக, ஏறுதழுவுதல் காட்சியை வைத்தார்.**

இவ்வளவு தடைகளையும் தி.மு.க. அரசு உடைத்து எறிந்ததால்தான் இன்றைக்கு ஏறுதழுவுதல் போட்டி கம்பீரமாக நடக்கிறது. இந்த சாதனை வரலாற்றின் தொடர்ச்சியாக இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில், காளைகள், ஏறுதழுவுதல் பற்றிய அருங்காட்சியகமும், நூலகமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

பல நூற்றாண்டிற்கு முந்தைய நூல்களும், ஓவியங்களும், புகைப்படங்களும் இங்கே இருக்கிறது. இதனை உருவாக்கித் தந்த தமிழ் இணையக் கல்விக் கழகத்துக்கு நன்றி!

**தமிழ்நாடு என பெயர் சூட்டினார் அண்ணா!**

**‘செம்மொழி’ தகுதி பெற்றுத் தந்தார் கலைஞர்!**

அன்னை தமிழ் நிலத்துக்கு பேரறிஞர் அண்ணா “தமிழ்நாடு’ என பெயர் சூட்டினார். தமிழுக்கு ‘செம்மொழி’ தகுதி பெற்று தந்தார் தலைவர் கலைஞர். இன்றைக்கு தமிழர் பண்பாட்டு அடையாளமான ஏறுதழுவுதலுக்கு, நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அரங்கம் அமைத்திருக்கிறோம்! இந்த தருணத்தில் நான் உங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புவது, ”சாதிப் பிளவுகளும், மத வேறுபாடுகளும், தமிழர் ஒற்றுமையை சிதைக்க பிற்காலத்தில் உருவாக்கப்பட்டவை என்பதை உணர்ந்து, தமிழர் என்ற நமது அடையாளத்தோடு இதுபோன்ற பண்பாட்டுத் திருவிழாக்களை ஒற்றுமையாக நடத்துவோம்!”

இந்த அரங்கில், காளைகள் வீரமாக களம் இறங்கட்டும்! காளையர்கள் தீரமாக காளைகளை தழுவட்டும்! தமிழர்கள் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு கண்டுகளிப்போம்!

தமிழ் வாழ்க! தமிழ்நாடு வாழ்க!

**அண்ணா கண்ட தமிழ்நாடு! கலைஞர் பெற்ற செம்மொழி தகுதி!**

**திராவிட மாடல் அரசு தந்த ஏறுதழுவுதல் பிரமாண்ட அரங்கம்!**

வீரவிளையாட்டான ஏறுதழுவுதல் வெல்க!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



சேலம் மாவட்டம், ஏத்தாப்பூர் பகுதியை சார்ந்த அரசு போக்குவரத்து கழக ஓட்டுநர் அன்பழகன் சாலை விபத்தில் இயற்கை எய்தினார். அன்னாரின் குடும்பத்திற்கு தொ.மு.ச. சார்பாக சங்கத்தின் சிறப்பு தலைவர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. நேரில் சென்று ரூ.3 இலட்சம் நிதி உதவி வழங்கினார். மாவட்ட கவுன்சில் தலைவர் வ.மணி மற்றும் நிர்வாகிகள் பொதுச் செயலாளர் ஜி.மனோகரன், பொருளாளர் கே.டி.முருகன், துணைத் தலைவர் கே.ஸ்ரீதர், பட்டீஸ்வரன், மலர்செல்வன், வேலு ஆகியோர் உடன் இருந்தனர்.

### தருமபுரி - சேலம் தேசிய நெடுஞ்சாலையில்

# தொப்பூர் இரட்டைப்பாலத்தில் சாலை விபத்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் - நிதியுதவி!

சென்னை, ஜன. 26-

தருமபுரி மாவட்டம், தருமபுரி - சேலம் தேசிய நெடுஞ்சாலையில் தொப்பூர் இரட்டைப்பாலத்தில் நிகழ்ந்த சாலை விபத்து அறிந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல், நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் நேற்று விடுத்த அறிவிப்பு வருமாறு:-

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாளையம் உள்வட்டம், தருமபுரி - சேலம் தேசிய நெடுஞ்சாலையில் தொப்பூர் இரட்டைப்பாலம் அருகில் 24.1.2024 மாலை 5.15 மணியளவில் 3 லாரிகள் மற்றும் 2 கார்கள் அடுத்தடுத்து மோதிக் கொண்ட சாலை விபத்தில் கோயம்புத்தூர், டவுன்ஹால், அசோக் நகரைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த திருமதி.மஞ்சு (வயது56) க/பெ. கார்வின், விமல் (வயது 28) த/பெ.ஜெயபால், திருமதி. அனுஷ்கா (வயது.23) க/பெ. விமல், திருமதி. ஜெனிபர் (வயது 29) க/பெ. வினோத் ஆகிய 4 நபர்கள் உயிரிழந்தனர் என்றும், இவ்விபத்தில் 8 நபர்கள் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன். இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாயும், காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் நபர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அறிவிப்பில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# மிஸ்டர் உதயநிதி கிளாசிக் தென்னிந்திய அளவிலான ஆணழகன் போட்டி!

## ஆ.இராசா எம்.பி. - கே.இ.பிரகாஷ் - அ.ரவி பரிசுகள் வழங்கி சிறப்புரை!

கோவை, ஜன.26-

கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி மற்றும் இந்தியன் பிட்னஸ் பெடரேசன் இணைந்து மிஸ்டர் உதயநிதி கிளாசிக் எனும் தலைப்பில் தென்னிந்திய அளவிலான ஆணழகன் போட்டி இன்று (26.01.2024 -வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணி முதல் மேட்டுப்பாளையம், கோஆப்ரேட்டிவ் காலனியில் உள்ள இஎம்எஸ் திருமண மண்டபத்தில் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எ.ஆர்.கே.ஹக்கீம், துணை அமைப்பாளர்கள் க.நாகராஜ், பி.கே.அருணாச்சலம், வே.சூரியன் தம்பி, உதயநிதி பாபு, எம். மனோஜ் ஆகியோர் முன்னிலையில், மேட்டுப்பாளையம் தெற்கு நகர கழக செயலாளர் ப.முனுசாமி, மேட்டுப்பாளையம் வடக்கு நகர கழக செயலாளர் மு.முகமது யூனுஸ் வரவேற்புரையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் விக்கி (எ) ப.விக்னேஷ் குமார் ஒருங்கிணைப்பில் இந்த போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்த ஆணழகன் போட்டியில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி பாராருமன்ற ஆ.ராசா, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெறும் இளைஞர்களுக்கு பண விருதுகள் (ஒவ்வொரு வகையிலும்) மொத்த ரொக்க விருது: ரூ.1,00,000/ ஒட்டு மொத்தமாக: ரூ.50,000/- ஒவ்வொரு வகுப்பும் முதல் 10: நினைவுப் பரிசு, சான்றிதழ், பதக்கம்: ரூ.1,20,000 வழங்கப்பட உள்ளது. இதில் கழக விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் சி.ஆர்.இராமச்சந்திரன், கழக விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பா.அருண்குமார், கழக விவசாயி துணைச் செயலாளர் எல்.பி.தர்மலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் நா.புருஷோத்தமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.சண்முகசுந்தரம், டி.பி.சுப்பிரமணியன், அ.அசரப்அலி, சோமு (எ) த.சந்தோஷ், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்

ஏ.பி.நாகராஜ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வி.சி.ஆறுக்குட்டி, கோவை மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச் செல்வன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஆ.அசோக், பி.செந்தில், எஸ்.ஜெயந்தி, பொருளாளர் எஸ்.அப்துல் ரகுமான்,

மாவட்ட கவுன்சிலர் இ.ஆனந்தன், தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் ஆர்.நடராஜன், நகரக் கழக முன்னாள் செயலாளர் எம்.அப்துல் ஹமீது உள்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொள்கின்றனர்.

இறுதியில் நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.ரஹீம் நன்றியுரையாற்றுகிறார்.

### மேல்மலையனூர் - சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு

# புதிய வழித்தடத்தில் பேருந்து சேவை!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜன.26-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில் பிரசித்தி பெற்ற அங்காளம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து செல்கின்றனர். மேலும் அமாவாசை உள்ளிட்ட மாசி திருவிழா நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

மேலும் மேல்மலையனூரில் இருந்து வடபாலை, செவலபுரை, செஞ்சி, வழியாக புதிய வழித்தடத்தில் புதிய பேருந்து சேவையை செய்து தர வேண்டி அப்பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

இக்கோரிக்கையினை ஏற்று மேல்மலையனூரில் இருந்து வடபாலை, செஞ்சி வழியாக சென்னை கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பஸ் நிலையத்திற்கு புதிய பேருந்து சேவை இயக்கம் தொடக்க விழா நிகழ்ச்சி செஞ்சி பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக விழுப்புரம் கோட்டம் துணை மேலாளர் இயக்கம் கார்த்திகேயன் தலைமை தாங்கினார்.

செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் முன்னிலை வகித்தார். செஞ்சி பணிமனை மேலாளர் சுரேஷ் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மேல்மலையனூரில் இருந்து சென்னைக்கு புதிய வழித்தடத்தில் புதிய அரசு பேருந்து சேவையை தொடங்கி வைத்தார்.

இதில் விஜயகுமார், நகர செயலாளர் கார்த்திக், தொ.மு.ச. லூர்து இமானுவேல், தொ.மு.ச. நிர்வாகிகள் ஹரிகிருஷ்ணன், தியாகராஜன் காதர் நவாஸ், தமிழ்மணி, ராஜேந்திரன், சீனிவாசன், நூர்ஜகான் ஜாபர், லட்சுமி வெங்கடேசன், புவனேஸ்வரி அண்ணாதுரை, அம்ஜத் பாண்டே, பாஷா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### குடியரசு தினத்தன்று

# அதிகாலை 4 மணிக்கு சேவை தொடக்கம்!

## மெட்ரோ ரெயில் நிர்வாகம்!

புதுடெல்லி, ஜன.26-

குடியரசு தின விழாவன்று டெல்லியில் மெட்ரோ ரெயில் சேவை அதிகாலை 4 மணிக்கு தொடங்கும்.

காலை 6 மணிக்குப் பிறகு வழக்கமான அட்டவணையின் கீழ் செயல்படும் என அறிவித்துள்ளது.

இந்தியாவில் வரும் 26 ம் தேதி குடியரசு தினம் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தின விழாவை ஒட்டி டெல்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஒவ்வொரு மாநில சிறப்புகளை எடுத்துரைக்கும் வகையில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெறும்.


இந்நிலையில், குடியரசு தின விழாவன்று டெல்லியில் மெட்ரோ ரெயில் சேவை அதிகாலை 4 மணிக்கு தொடங்கும் என மெட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், 30 நிமிடங்களுக்கு ஒரு ரெயில் என காலை 6 மணி வரை ரெயில்கள் இயங்கும். காலை 6 மணிக்குப் பிறகு வழக்கமான அட்டவணையின் கீழ் செயல்படும் எனவும் அறிவித்துள்ளது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கவிவேந்தர் கா.வேழவேந்தன்

**ஜனவரி 26 (2022)**



கல்வி கற்கும் பருவத்திலேயே மிகச் சிறந்த கவிஞராகவும், தலைசிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் விளங்கியவர்.

இவரது ‘வேழவேந்தன் கவிதைகள்’ என்ற நூலினை பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டு, அவரது பாராட்டை பெற்றவர்.

“கவிவேந்தர் கா.வேழவேந்தன் என் உடன்பிறப்புக்களில் ஒருவர் என்கிறபோது உவகை உதடுகளில் மட்டும் பூத்திடவில்லை என் உள்ளத்திலும் கூடப் பூத்துக் குலுங்குகிறது” என கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

பத்தாண்டுகள் கும்மிடிபூண்டி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**


சன
26
2024
வெள்ளிக்கிழமை
மாலை 4.00 மணி
சிறுகனூர்-திருச்சி
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தேர்தல் அரசியல் வெள்ளி விழா !
கட்சித் தலைமையின் அகவை அறுபது மணி விழா !
'இந்தியா' கூட்டணி தேர்தல் வெற்றி கால்கோள் விழா !
வெல்லும் சனநாயகம்
மாநாடு
சிறுத்தைகளின் அடுத்தப் பாய்ச்சல்
தலைமை
முனைவர்–எழுச்சித்தமிழர்
தொல்.திருமாவளவன்
சிறப்புரை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
தளபதி மு.க.ஸ்டாலின்
வெல்லும் 'இந்தியா' ! வெல்லும் சனநாயகம் !
அன்புடன்
எஸ்.எஸ்.பாலாஜி
துணைப் பொதுச் செயலாளர் - திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர்
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி
தாமியா
9841798221



திருச்சி தெற்கு மாவட்டத்தில் திருச்சி கிழக்கு தொகுதியில் உள்ள டி.வி.எஸ். டோல்கேட்டில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் திருவுருவச் சிலையை தெற்கு மாவட்டச் செயலாளரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான மகேஸ் பொய்யாமொழி தலைமையில், கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, முன்னிலையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக கலைஞர் உருவச் சிலையை திறந்து வைத்து வாழ்த்தி பேசினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், மணப்பாறை அப்துல் சமது, மாநகர செயலாளரும், மண்டல குழு தலைவருமான மு.மதிவாணன், மற்றும் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.




நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கிருஷ்ணகிரி மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். உடன் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப் புக் குழுவினர்களான கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டக் கழக செயலாளர்கள் தளி ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., தே.மதியழகன் எம்.எல்.ஏ உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### உலகளவிலே தமிழ்மொழி கீ-போர்ட் உருவாகக் காரணமாக இருந்தவர்!

# தமிழ்நாட்டில் கணினிப் புரட்சியை உருவாக்கியவர் கலைஞர்!

## சேலத்தில் கழக இளைஞர் அணி மாநில மாநாட்டில் தயாநிதி மாறன் எம்.பி. பேச்சு!

சேலம், ஜன.26-

"தமிழ்நாட்டில் கணினிப் புரட்சியை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்'' என்று மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஒன்றிய அமைச்சருமான தயாநிதி மாறன் அவர்கள் சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி மாநாட்டில் "கலைஞரும் கணினியும்" என்ற தலைப்பில் பேசும் போது கூறினார்!

சேலம் பெத்தநாயக்கன் பாளையத்தில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்ற தி.மு.க. இளைஞரணியின் 2வது மாநில எழுச்சி மாநாட்டில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் அவர்கள், "கலைஞரும் கணினியும்" என்ற தலைப்பில் பேசியதாவது :

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில், நமது மாநிலத்தின் உரிமைகளை மீட்டிட, கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழகத்தின் இதயத் துடிப்பாம் இளைஞரணி சார்பில் நடைபெறும் இந்த மாபெரும் இரண்டாவது மாநில மாநாட்டினை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கின்ற, இந்த மாநாட்டின் தலைவர், கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை யின் ஆற்றல் பொருந்திய அமைச்சருமான, இளைஞர்களின் எதிர்காலம், தமிழகத்தின் வருங்காலம் என் ஆருயிர் இளவல் உதயநிதி ஸ்டாலின் அவர்களே, பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களே,

**கலைஞர் என்றால் கணினி!**

கழகத்தின் முதன்மைச் செயலாளரும் இந்த மாநாட்டின் ஒருங்கிணைப்பாளருமான, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் என் கே.என்.நேரு அவர்கள் உட்பட மேடையில் அமர்ந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, மற்றும் இங்கு கூடியிருக்கும் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளே உங்கள் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு தரப்பட்ட தலைப்பு, "கலைஞரும் கணினியும்", பொதுவாக கலைஞர் என்றால் தமிழ், கலைஞர் என்றால் கவிதை, கலைஞர் என்றால் கதை வசனம், கலைஞர் என்றால் மேடைப் பேச்சு, கலைஞர் என்றால் கட்டுரை, கலைஞர் என்றால் ஆளுமை, கலைஞர் என்றால் அரசியல் சாணக்கியர், கலைஞர் என்றால் சிந்தனையாளர், கலைஞர் என்றால் தகவல் தொழில் நுட்ப புரட்சி என்று இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். அந்த வகையில் கலைஞர் என்றால் கணினி.

நீங்கள் எப்படி என்று கேட்பீர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செய்யாத புரட்சியை செய்தார், அது என்ன புரட்சி என்றால் முதன்முதலில் தமிழ்நாட்டில், அமைச்சரவையில் தொழில்நுட்பத் துறைக்கு என தனி அமைச்சகத்தை உருவாக்கிய பெருமைக்குச் சொந்தக்காரரர் நமது கலைஞர் அவர்கள்தான். அதுமட்டுமல்ல இன்றைக்கு நாமெல்லாம் கைப்பேசியில் தமிழில் டைப் செய்கிறோமே, அது எப்படி, சாத்தியமானது, அதற்குக் காரணம் யார் என்றால், அதுவும் கலைஞர் தான்.

**"தமிழ்நெட் 99"**
**இணையதள மாநாடு!**

எப்பொழுதும் தமிழ் ஆர்வலர்களும், புலவர்களும், இருபிரிவினராய் இருந்து பெரும்பாலும் கருத்து வேறுபாட்டில் இருப்பர். அந்த வகையில் இந்த முறையும், கணினியின் கீபோர்டில் எந்த வகையான கீபோர்டை நாம் பயன்ப டுத்துவது என இருபிரிவினருக்கும் விவாதம், இதை உணர்ந்த கலைஞர், இதற்கு நல்ல தீர்வு காண வேண்டும் என்பதற்காக கடந்த 1999 ஆம் ஆண்டு "தமிழ்நெட் 99" என்ற இணையதள மாநாட்டை சென்னையில் நடத்தி, இப்பிரச்னைக்கு ஒரு தெளிவான சிந்தனை தான் தீர்வாகும் என்றும், கணினியில் தமிழ் மலர்ந்தால்தான் தமிழ் மேலும் முன்னேறும் என்று கூறி, தமிழ் கீபோர்டை உருவாக்க காரணமாகவும் திகழ்ந்தவர் நமது தானைத் தலைவர் கலைஞர் அவர்கள்.

**என் தந்தை முரசொலி மாறன்**
**கூறியது என்ன?**

அப்போது அந்த மாநாட்டின் துணைத் தலைவராக



இருந்தவர் மறைந்த என் தந்தை முரசொலி மாறன் அவர்கள், அவர் உரையில் ஒரு பகுதியை இங்கே கோடிட்டு காட்ட விரும்புகிறேன். "தமிழ் பேசி உரையாடும் ஆற்றலும் கணிப்பொறிக்கு வந்துவிட்டால், தமிழ்நாடு மட்டுமல்ல, தமிழ்கூறும் நல்லுலகமே ஓர் குடையின்கீழ் வந்துவிடும். இயல், இசை, நாடகம் என்று வகுத்த தமிழை முத்தமிழ் என்பார்கள், ஆனால் தற்போது நான்காவது தமிழ் உருவாகியிருக்கிறது. அதன் பெயர்தான் கணிப்பொறி தமிழ், அதை உருவாக்கியவர் கலைஞர் அவர்கள், அவர் முத்தமிழறிஞர் மட்டுமல்ல, நான்காவது தமிழை அறிமுகப்படுத்திய நற்றமிழ் அறிஞர் என்றும் கூறலாம்". என்று குறிப்பிட்டார்.

ஏன் இன்னும் சொல்ல வேண்டும் என்றால், திருக்குவளை என்னும் ஒரு குக்கிராமத்தில் பிறந்த ஒருவர், கணிப்பொறிக்கு உலகளவிலே தமிழ் மொழி கீபோர்ட் உருவாக காரணமாக இருந்தவர் கலைஞர் அவர்கள்.

அதுமட்டுமல்லாது, கிட்டத்தட்ட 24 ஆண்டுகளுக்கு முன்பே, இந்தியாவிலேயே, ஏன் ஆசியாவிலேயே, மிகப்பெரிய ஐ.டி. புரட்சிக்காக டைடல் பார்க் ஐ சென்னையில் அமைத்து, ஐ.டி. துறை மூலம் தம் தமிழ் இளைஞர்கள் எல்லாம் வேலை வாய்ப்பை பெற்று உலகில் பல்வேறு இடங்களுக்கு சென்று நல்ல வருமானம் ஈட்ட வேண்டும் என்றும், அவரது வாழ்க்கை முன்னேற்றம் அடைய வேண்டும் என்றும் எண்ணியவர் நம் கலைஞர் அவர்கள்.

**கலைஞரின்**
**கணினிப் புரட்சி!**

அதனடிப்படையில் தான், உலகின் தலைசிறந்த சாஃப்ட்வேர் நிறுவனமான மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தலைவர் இந்தியாவிற்கு வந்தபோது, தமிழ்நாட்டிற்கும் வருகை தந்தார். அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், அப்போது நமது கலைஞர் எதிர்க் கட்சித் தலைவர் தான். இருப்பினும் அவர் தமிழ்நாட்டிற்கு வந்து முதலில் சந்தித்தது நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத்தான். காரணம் அவர் கணினித்துறையில் செய்த புரட்சி.

இன்று நாம் எல்லோரும் இந்தியாவில் ஐஃபோன் தயாரிப்பதை பெருமையாக பேசுகிறோம். அதற்கு காரணம் நமது கலைஞர் அவர்கள்தான். அவர் கணினி புரட்சி செய்ததன் காரணமாகத்தான், இன்றைக்கு ஃபாக்ஸ்கான் (Foxconn) ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் (Flextronics), சாம்சங்க் (Samsung), டெல் கம்ப்யூட்டர்ஸ் (Dell Computers) உள்ளிட்ட நிறுவனங்கள் எல்லாம், இன்றைக்கு தமிழ்நாட்டில் உருவாகி, நமக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் புரட்சியை செய்தவர் நமது கலைஞர் அவர்கள்.

அந்தக் காலகட்டத்திலே, கலைஞர் கணினிப் புரட்சி செய்தது, கணினியில் தமிழை புகுத்தியது போலவே, தமிழ் மொழிக்கு சிறப்பு செய்தார். இன்று தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்திருக்கிறது என்றால் அதற்கு காரணம் ஒரே ஒருவர்தான், அதுவும் நமது கலைஞர் அவர்கள்தான்.

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலே தேர்தல் வாக்குறுதியில் தமிழுக்குச் செம்மொழி தகுதி வாங்கித் தருவேன் என்று உறுதியளித்தார். அப்போது அதை நிறைவேற்றும் பணியினை அண்ணன் டி.ஆர். பாலு அவர்களுக்கும், எனக்கும் கலைஞர் வழங்கியிருந்தார். அந்த நேரத்தில் கலைஞர் அவர்களை டெல்லியில் சந்தித்து, இன்று அமைச்சரவை கூட்டம் நடக்கிறது, அதில், தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்குகின்ற கோப்பு அமைச்சரவைக்கு வருகிறது. நிச்சயம் தமிழ்மொழிக்கு செம்மொழித் தகுதியை வாங்கிவிட்டு உங்களை வந்து சந்திக்கிறோம் என்று உறுதியளித்தோம்.

அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்க் தலைமையில், அமைச்சரவை கூட்டம் கூடியது, செம்மொழி தகுதி தொடர்பான கோப்பு வருகிறது. அந்த கோப்பு தொடர்பான அமைச்சர் யார் என்றால், மறைந்த ஜெயபால் ரெட்டி அவர்கள், அவர் அந்த கோப்பை படித்து விட்டு, தமிழுக்கு செம்மொழி தகுதி வழங்கலாம் என்று சொல்லிவிட்டு, "அதை நான் முதலில் எதிர்க்கிறேன் என்றார், அதாவது எந்த அமைச்சர் தமிழ்மொழிக்கு செம்மொழி தகுதி வழங்கலாம் என்று சொன்னாரோ அவரே அதனை முதலில் எதிர்க்கிறேன் என்றார். நாங்கள் எல்லாம் வியப்பில் காரணம் என்ன என்று கேட்டோம். அதற்கு அவர்'' நான் ஆந்திராவைச் சார்ந்தவன் தெலுங்கு பேசுகிறவன், நான் தமிழுக்கு செம்மொழி தகுதி வழங்கி விட்டு, திரும்ப என் சொந்த ஊருக்குச் செல்ல முடியாது, பின் எங்க ஊர் மக்கள் என்னை கல்லால் அடிப்பார்கள் என்றார்.

அவ்வளவுதான் உடனே, கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்களும் அதே கருத்தை முன்வைத்து தமிழுக்கு செம்மொழி தகுதி தரக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்தனர். காரசாரமான வாக்குவாதம் நடை பெறுகிறது. உடனே நான் அவையில் இருந்து வெளியே வந்து தலைவர் கலைஞர் அவர்களுக்கு ஃபோன் செய்து, "தாத்தா'' தமிழுக்கு செம்மொழி தகுதி பெறுவதில் ஒரு பிரச்னை எழுந்துள்ளது என்று சொன்னேன்.

**திராவிட மொழிகளுக்கு**
**செம்மொழி அந்தஸ்து!**

அதற்கு கலைஞர் அவர்கள் என்ன பிரச்னை என்று கேட்டார், நான் நடந்ததைக் கூறினேன். அதற்கு கலைஞர் அவர்கள்,'' அவ்வளவுதான, நான் சொல்வதை அப்படியே போய் அவையில் சொல் என்று சொன்னார், நானும் அவர் கூறியதைப் போல் அவைக்குச் சென்றேன். அங்கே இந்த கோப்பை எடுத்து ஓரங்கட்ட பார்த்தனர், அப்போது, நான் பிரதமரிடம் "ஒரே ஒரு நிமிடம்'' என்று கூறி, நான் இப்போதுதான் கலைஞர் அவர்களிடன் பேசிவிட்டு வந்தேன், அவர் இதற்கு ஒரு தீர்வு சொல்லியிருக்கிறார். அந்த தீர்வை நீங்கள் கேட்ட பிறகு, நீங்கள் உங்கள் முடிவை எடுங்கள் என்று சொன்னேன். என்ன தீர்வு என்று கேட்டார். அதற்கு நான் தீர்வு ஒன்று தான், அவர்கள் கேட்பது நியாயம்தான், தமிழுக்கு மட்டுமல்ல, தெலுங்கு மொழிக்கும், கன்னட மொழிக்கும், மலையாள மொழிக்கும் செம்மொழி தகுதி தாருங்கள், ஏனென்றால் அத்தனையும் திராவிட மொழிகள், எனவே இந்த அனைத்து மொழிகளுக்கும் செம்மொழி தகுதி தருவதில் எங்களுக்கு பிரச்னை இல்லை என்று சொன்னேன்.

உடனே ஜெயபால் ரெட்டிக்கு மிகுந்த சந்தோஷம். அன்றே திராவிட மொழிகள் அனைத்திற்கும் செம்மொழி தகுதி கிடைத்தது. அதுமட்டுமல்லாது இன்னொரு முக்கியாமான சிறப்பு என்ன தெரியுமா. இந்தியாவிலேயே முதல் செம்மொழி தகுதி பெற்றது நம் தமிழ் மொழி தான். அதன் பிறகு தான் சமஸ்கிருதம் என்பதை கூறி இந்த நல்ல வாய்ப்பை தந்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. பேசினார்.



வாலாஜா ஊராட்சி ஒன்றியம், இராணிப்பேட்டை சிப்காட் பெல் (BHEL) நிறுவனம் பேருந்து நிறுத்தத்திலிருந்து சென்னை செல்லும் புறநகர் புதிய வழித்தட பேருந்தினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் .ச.வளர்மதி, ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே..சுந்தரமூர்த்தி , மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றியக் குழுத் தலைவர் வெங்கட்ரமணன், பொது மேலாளர் அரசு போக்குவரத்துக் கழகம் கணபதி. தொ.மு.ச. வேலூர் மண்டலம் பொது செயலாளர் .ரமேஷ். ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் .இராதாகிருஷ்ணன், மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு

# ரூ.35.15 கோடி மதிப்பில் செவிலியர் பயிற்சிப் பள்ளிக் கட்டிடம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை!

சென்னை, ஜன.26-

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள செவிலியர் பயிற்சி பள்ளி 1980 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ளது. இம்மருத்துவமனையில் செவிலியர் பயிற்சி படிப்பு டிப்ளமோ இன் ஜெனரல் நர்சிங் மற்றும் மிட்வைபரி (GNM) 3 வருடப்படிப்பாக வழங்கப்படுகிறது.



1980 ஆம் ஆண்டு 30 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இந்த செவிலியர் பயிற்சி பள்ளி வகுப்பறை மற்றும் விடுதி கட்டிடம் இல்லாமல் மருத்துவமனை வளாகத்தில் உள்ள செவிலியர் விடுதிக் கட்டிடத்திலேயே இயங்கி வந்தது. அதன் பின்பு 1991 ல் மாணவர் சேர்க்கை 50 ஆக உயர்த்தப்பட்டது. பின்பு 1996 இல் மாணவர் சேர்க்கை 80 ஆக உயர்த்தப்பட்டு இரண்டு வகுப்பறைகள் மற்றும் ஒரு அலுவலக அறையில் ஆய்வகக் கூடங்கள் இல்லாமல் சிறிய அளவில் இயங்கி வந்தது. அதன் பின்பு முறையே மாணவர் சேர்க்கை 2004ல் 130 ஆகவும் 2007ல் 135 ஆகவும் உயர்த்தப்பட்டது. 2015 இல் மாணவர் சேர்க்கை 100 ஆக குறைக்கப்பட்டது. தற்போது செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் மாணவர் விடுதி ஆகியவை முந்தைய மாணவர் விடுதியின் பழைய கட்டிடத்தில் போதிய உட்கட்டமைப்பு வசதிகள் எதுவும் இல்லாமல் நர்சிங் மாணவியருக்கான விடுதியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 1996 இல் செவிலியர் பள்ளிக்காக கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்ட கட்டிடம் பழுதடைந்த நிலையில் கட்டிடத்தின் மேற்கூரை, சுவர்கள் சேதம் அடைந்து இடிந்து விட்டன. அதனை அடுத்து 2018ல் அதிகாரிகள் கட்டிடத்தை ஆய்வு செய்து சரி செய்ய முடியாது மற்றும் பயன்படுத்துவதற்கு பாதுகாப்பற்றது என சான்றிதழ் அளித்தனர். புதிய கட்டிடம் கட்டவும் பரிந்துரை செய்தனர்.

ஆய்வுப் பொருட்கள் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் போதுமான அளவு இருந்தாலும் அவற்றைப் பாதுகாக்கவோ பயன்படுத்தவோ போதுமான கட்டமைப்பு வசதி இல்லை என்பதால் செவிலியர் ஆசிரியர் கற்பித்தலில் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு செவிலியர் பயிற்சிப் பள்ளிக் கட்டிடம் அமைக்க பரிந்துரைக்கப்பட்டு புதிய கட்டிடம் அமைக்க அரசாணை பெறப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் முடிவு பெற்று செவிலியர் பயிற்சி மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கோயம்பேட்டிற்கு பதிலாக - ஆம்னி பேருந்துகள்

# கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து தான் இயக்கப்படும்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

செசென்னை, ஜன. 26 -

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :



செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்க த்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் 88.52 ஏக்கர் பரப்பளவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய பேருந்து நிலையங்களுள் ஒன்றான "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை" தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.12. 2023 அன்று திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்" மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. தினம்தோறும் 5,000க்கும் மேற்பட்ட பயணிகள் தற்போது பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இப்பேருந்து முனையத்தை முழுமையாக மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற அளவிற்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு வருகிறது.

ஆம்னி பேருந்து உரிமையாளர்களுக்கு ஏற்றாற்போல் அரசு செயல்பட முடியாது. மக்களுடைய தேவைகளுக்கும், மக்களுடைய விருப்பத்திற்கும் தான் அரசு செயல்பட முடியும். ஏற்கனவே ஆம்னி பேருந்து உரிமையாளர்களோடு பேருந்து முனையம் திறக்கப்படு வதற்கு முன்பாகவே, போக்குவரத்து துறை செயலாளர், எங்கள் துறையினுடைய வீட்டு வசதித் துறை செயலாளர், உறுப்பினர் செயலர், போன்றோர்களோடு கலந்தாலோசித்து ஆம்னி பேருந்து உரிமையாளர்களோடு கூட்டத்தை நடத்தி இருக்கிறோம். அந்த கூட்டத்திலேயே கடந்த மாதம் 30ந் தேதி ஆம்னி பேருந்து திறக்கப்பட்டவுடன் படிப்படியாக ஆம்னி பேருந்துகளை இயக்குவோம் என்று அறிவித்திருந்தார்கள். மீண்டும் அவர்கள் கால அவகாசம் கேட்டதற்கிணங்க ஜனவரி மாதம் 24ந் தேதி முதல் நாங்கள் அங்கே ஆம்னி பேருந்துகளை இயக்குவோம் என்று கூறியிரு ந்தார்கள். இப்பொழுது திடீரென்று அவர்களே ஒத்து கொண்டதற்கு மாறாக இப்பொழுது நாங்கள் இயக்குவதற்கு தயாராக இல்லை என்கிறார்கள்.

அரசு அவர்களுடைய விருப்பத்திற்கு போல் செயல்பட முடியாது, மக்களுடைய விருப்பத்திற்கு ஏற்றாற்போல் தான் அரசு செயல்படும். ஆகவே (24.0 1.2024) இன்றையிலிருந்து ஆம்னி பேருந்துகள் கோயம்பேட்டில் இருந்து இயக்குவதற்கு முழுமையாக தடை செய்யப்படும். ஆம்னி பேருந்துகள் முழுமையாக கிளாம்பாக்கத்தில் கட்டப்பட்டிருக்கின்ற கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் இருந்துதான் இயக்கப்படும், அதற்கு தேவையான அனைத்து வசதிகளையும், பயணிகளுக்கு தேவையான வசதிகளையும், பேருந்துகளுக்கு தேவையான வசதிகளையும் முழுமையாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும், போக்குவரத்து துறையும் செய்து கொடுத்து இருக்கின்றோம். ஆகவே ஒத்துக் கொண்டதைப்போல் ஆம்னி பேருந்துகளை கிளம்பாக்கத்தில் இருந்து இயக்குவதற்கு பேருந்து உரிமையாளர்களும், சங்கங்களும் அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே நிபந்தனைக்குட்பட்டு சொல்லிய வார்த்தையைக் காப்பாற்றும் நோக்கோடு ஆம்னி பேருந்து உரிமையாளர்களும், சங்கங்களும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் வைத்த கோரிக்கை அனைத்தையும் நிறைவேற்றித் தந்திருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

# “மாநில நிதிப் பங்கீட்டைக் குறைக்க பிரதமர் மோடியின் திரைமறைவு பேரம்!”

## போட்டுடைத்த ‘நிதிஆயோக்’ சி.இ.ஓ!

அனைத்துச் சாலைகளும் அயோத்தியை நோக்கித் திரும்பியிருக்கும் சூழலில், **“ஒன்றிய அரசின் வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியைச் சுருக்குவதற்கு, பிரதமர் மோடி திரைமறைவு பேரத்தில் ஈடுபட்டார்”**

என்று வெளியாகியிருக்கும் தகவல், ஐந்து மாதங்கள் கழித்துப் பெரும் அதிர்வலைகளைக் கிளப்பியிருக்கிறது!




கடந்த ஆண்டு, ஜூலை 23ஆம் தேதி, டெல்லியில் ‘சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான மையம்’ எனும் அரசுசாரா அமைப்பின் சார்பில் ‘நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை’ என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. அதில், ‘நிதி ஆயோக்’ அமைப்பின் தலைமைச் செயலதிகாரியான பி.வி.ஆர்.சுப்பிரமணியம் உரையாற்றினார். முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அரசிலும், மோடி ஆட்சியிலும் பிரதமர் அலுவலகத்தில் இணைச் செயலாளராகப் பணியாற்றியவர் பி.வி.ஆர்.சுப்பிரமணியம். கருத்தரங்கத்தில் அவர் பேசும்போது வீசிய சில குண்டுகள், ஐந்து மாதங்கள் கழித்து இப்போது வெடித்திருக்கின்றன.

பி.வி.ஆர்.சுப்பிரமணியம் கருத்தரங்கத்தில் பேசிய வீடியோ, யூடியூப் சேனல் ஒன்றில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அந்த வீடியோ கடந்த ஜனவரி 18ஆம் தேதி திடீரென நீக்கப்பட்டது. காரணம், ‘தி ரிப்போர்ட்டர்ஸ் கலெக்டிவ்’ என்ற அமைப்பு, ஆர்.டி.ஐ சட்டத்தின் கீழ் பிரதமர் அலுவலகத்துக்குச் சில கேள்விகளை அனுப்பியிருக்கிறது. அதையடுத்தே குறிப்பிட்ட காணொலி யூடியூபிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

அந்தக் காணொலியில் இடம்பெற்றிருந்த கருத்துகள்தான் தற்போது சூறாவளி யைக் கிளப்பியிருக்கின்றன.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஒன்றிய அரசால் நிதி ஆணையம் அமைக்கப்படும். அந்த ஆணையம்தான், ஒன்றிய அரசின் வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்கு எவ்வளவு நிதி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதைப் பரிந்துரைக்கிறது. அந்த வகையில், மன்மோகன் சிங் ஆட்சியில் அமைக்கப்பட்ட 13வது நிதி ஆணையம், ஒன்றிய அரசின் வரி வருவாயிலிருந்து 32 சதவிகித நிதியை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று பரிந்துரைத்தது. அப்போது, குஜராத் முதல்வராக இருந்த நரேந்திர மோடி, ‘மாநிலங்களுக்கு 32 சதவிகிதம் போதாது. 50 சதவிகித நிதியை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும்’ எனக் குரல் கொடுத்தார். அடுத்த சில மாதங்களில் மத்தியில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து மோடி பிரதமரான பிறகு காட்சிகள் மாறின.

ஒன்றிய வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியை 32 சதவிகிதத்திலிருந்து 42 சதவிகிதமாக 14வது நிதி ஆணையம் உயர்த்தியது. அப்போது, ‘42 சதவிகிதத்தை மீண்டும் 32 சதவிகிதமாகக் குறையுங்கள்’ என்று 14வது நிதி ஆணையத்தின் தலைவரான ஒய்.வி.ரெட்டியிடம் திரைமறைவில் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தியதாகச் சொல்லியிருக்கிறார் பி.வி.ஆர்.சுப்பிரமணியம்.

ஒய்.வி.ரெட்டி, இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்தவர். ‘மாநிலங்களுக்கான நிதியைக் குறைக்க வேண்டும்’ என்ற மோடியின் அழுத்தத்துக்கு ஒய்.வி.ரெட்டி பணியவில்லை. அதனால் நிதி ஆணையத்தின் பரிந்துரையை மிகவும் தாமதமாகவே ஒன்றிய அரசு ஏற்றுக்கொண்டது. அதன்பிறகு, ஒன்றிய அரசின் ஒட்டுமொத்த பட்ஜெட்டும் இரண்டே நாட்களில் மாற்றியமைக்கப்பட்டது. “இரண்டு மணி நேரம் நீடித்த அந்த ரகசிய பேரத்தில் பிரதமர் மோடி ஈடுபட்டபோது, நானும் அங்கு இருந்தேன். எங்கள் மூவரையும் தவிர வேறு எந்தவோர் அமைச்சரும், அதிகாரியும் அந்த இடத்தில் இல்லை” என்று குறிப்பிட்டிருக்கும் பி.வி.ஆர்.சுப்பிரமணியம், இன்னும் பல அதிர்ச்சியளிக்கும் தகவல்களையும் போட்டுடைத்திருக்கிறார்.



பி.வி.ஆர்.சுப்பிரமணியம்



ஒய்.வி.ரெட்டி

**“மோடி பிரதமரானவுடன் பா.ஜ.க அரசு தாக்கல் செய்யவிருந்த முதல் பட்ஜெட்டில், மாநிலங்களுக்கான நிதியை 42 சதவிகிதமாக நிதி ஆணையம் பரிந்துரைத்ததால் பெண்கள், குழந்தைகள், உள்ளிட்டோருக்கான நலத்திட்டங்களுக்கு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியை அவசர அவசரமாகக் குறைத்துவிட்டனர். ஆனால், திரை மறைவில் இந்த வேலைகளைச் செய்துவிட்டு, நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் மோடி, ‘மாநிலங்களுக்கு 42 சதவிகித நிதியை வழங்க நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறோம். எனது அரசு மாநிலங்களுக்கு ஆதரவானது. மாநிலங்களை வலுப்படுத்துவதை ஒரு கடமையாக நாங்கள் கொண்டிருக்கிறோம். இவ்வளவு நிதியை வைத்துக்கொள்ளும் அளவுக்கு சில மாநிலங்களிடம் கருவூலம்கூட கிடையாது’ என்றார். அதை ஒரு ‘ஜோக்’ என்று கருதி பா.ஜ.க எம்.பிக்கள் கைகொட்டிச் சிரித்தார்கள். இப்போது பிரதமரின் செயலால் சிரிப்பாய் சிரிக்கிறது பா.ஜ.கவின் மாநில அக்கறை” என்று கடுகடுக்கிறார்கள் எதிர்க்கட்சியினர்.**

குறிப்பிட்ட அந்தக் கருத்தரங்கில் பேசிய பி.வி.ஆர்.சுப்பிரமணியம், ‘ஜி.எஸ்.டி அமலாக்கத்துக்குப் பிறகு, மாநிலங்களுக்கான வருவாய் வரும் வழிகள் பெருமளவு அடைபட்டுவிட்டன’ என்கிறார்.

அதாவது, “செஸ் (Cess), சர்சார்ஜ் (Surcharge) என்ற பெயரால் அரசால் வசூலிக்கப்படும் நிதி, ஒன்றிய அரசுக்கானது. அதை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டிய அவசியம் கிடையாது’ என்று கூறியதோடு, அந்த வரிகளையும் கணிசமாக உயர்த்திவிட்டது.

தற்போது இந்த வரிகளின் மூலம் ஒன்றிய அரசுக்குக் கிடைக்கும் நிதி, ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் சுமார் 20 சதவிகிதம். மாநிலங்களுக்கு 42 சதவிகித நிதிப் பங்கீட்டை வழங்கும் பரிந்துரையை வேறு வழியின்றி ஒப்புக்கொண்டுவிட்டு, அதற்கு ஈடாக வேறு வகைகளில் மாநிலங்களிடமிருந்து வரி வசூலிக்கும் இது போன்ற நரித் தந்திரமான வேலைகளை மோடி அரசு செய்திருக்கிறது” என்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள்.

இதைத்தான் தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் தொடர்ச்சியாகச் சொல்லிவருகின்றன. ஜி.எஸ்.டி நிதிப் பங்கீடு தொடர்பாக மாநிலங்கள் எழுப்பும் உரிமை முழக்கம் நிதர்சனமானது என்பதை உறுதிப்படுத்தியிருக்கும் பி.வி.ஆர்.சுப்பிரமணியம், மோடியின் முகமூடியை யும் தன் கருத்தரங்க உரையில் கிழித்திருக்கிறார்.

**“நிதி ஆணையத் தலைவருடன் மறைமுக பேரத்தில் பிரதமர் மோடி ஈடுபட்ட செயல், அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது. சுதந்திர இந்தியாவில் இதற்கு முன்பு எந்தவொரு பிரதமரும் மாநிலங்களுக்கு எதிராக இப்படியொரு கேட்டைச் செய்ததில்லை” என்று கொதிக்கிறார்கள் எதிர்க்கட்சியினர்.**

‘அதிகார வெறிகொண்ட அரசு’ என்று காங்கிரஸ் அரசை மோடி விமர்சித்தார். இப்போது, மாநிலங்களுக்கு எதிராக மோடி செயல்படுவது மட்டும் அதிகார வெறி இல்லையா?

**– நன்றி**
**ஜூனியர் விகடன்**
28.1.2024

உலகமே வியந்து பார்க்கும் வகையில் சென்னையில்

# கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மருத்துவ மாநாடு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



*சென்னை, ஜன. 26 - அமைச்சர். மா. சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (24.01.2024) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மருத்துவத்தின் எதிர்காலம் - கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மருத்துவ மாநாடு சிறப்பு குறித்து எடுத்துரைத்தார்.*

*இது குறித்து அவர் தெரிவித்ததாவது*

*மருத்துவ உலகமே வியந்து பார்க்கின்ற வகையில், இந்தியாவில் முதன்முறையாக கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மருத்துவ மாநாடு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்ப ட்டுள்ளது. கடந்த 19.01.2024 முதல் 21.01. 2024 வரை 3 நாட்கள் “மருத்துவத்தின் எதிர்காலம்” (Future of Medicine) எனும் தலைப்பில் நடைபெற்ற இந்த மருத்துவ மாநாடு மிகப்பெரிய வெற்றியை கண்டுள்ளது.*

*உலகில் முதன்முறையாக Future of Medicine எனும் தலைப்பில் அனைத்து துறைகளும் கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மருத்துவ மாநாடு நடத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, சிங்கப்பூர், கத்தார், ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய 7 நாடுகளில் இருந்து 28 மருத்துவ நிபுணர்கள் உரை நிகழ்த்துவதற்கும், ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கும் இந்த மாநாட்டிற்கு வருகை புரிந்தார்கள். இந்தியா முழுவதிலும் இருந்து 185 மருத்துவ நிபுணர்கள் உரை நிகழ்த்தியிருக்கி றார்கள். மேலும், 12 பேச்சாளர்கள் காணொளி வாயிலாக உரை நிகழ்த்தி யிருக்கி றார்கள். ஆக மொத்தம் 225 பேர் இந்த மாநாட்டில் பங்கேற்று தங்களுடைய கட்டுரைகள் மற்றும் உரைகளை சமர்பித்துள்ளனர்.*

*இந்த மாநாட்டுக்காக பல்வேறு மருத்துவ மாணவர்கள் விரிவுரையாளர்கள் சமர்ப்பித்த 62 க்கு மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் தொகுப்புகளும் (Eunioa) புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இம் மாநாட்டிலே பங்கேற்ற பல்வேறு நாடுகளின் மருத்துவ வல்லுனர்களின் ஆராய்ச்சி குறிப்புக ளும் தொகுத்து (Vision Statement 2024) புத்தகமாக வும் வெளியிடப்பட்டுள்ளது. மருத்துவம், பல் மருத்துவம், ஆயுஷ் மருத்துவம் போன்ற 27 மருத்துவ பிரிவின் கீழ் விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளது.*

*இந்த மாநாட்டில் பங்கேற்ற தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலை கழக முதுநிலை மாணவர்களுக்கு 30 மதிப்பெண்களும், தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் சார்பில் 6 புள்ளிகளும், பல் மருத்துவ கவுன்சிலின் சார்பில் 16 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் சார்பில் நிறைவேற்றப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் அமர்வுகள் இந்த மாநாட்டில் நடத்தப்பட்டுள்ளது, இதில் இதய நோயின் போது செய்ய வேண்டிய முதலுதவி சிகிச்சைகள் குறித்து காணொலிக் காட்சி நிகழ்த்திக் காட்டப்பட்டது. பெண்களுக்கு மார்பக புற்றுநோய் குறித்த பரிசோதணை மேமோகிராம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த மாநாட்டில் ஒவ்வொரு அரங்கிலும் 1000 பேர் அமரும் வகையில் 8 அரங்குகள் அமைக்கப்பட்டு 30க்கும் மேற்பட்ட அமர்வுகள் நடத்தப்பட்டது.*

*அமெரிக்காவைச் சார்ந்த மரு.லிங்கப்பா அமர்நாத் என்ற மருத்துவர் இந்த மாநாட்டில் பங்கேற்ற போது நமது துறையின் செயலாளர் அவர்களிடம், அமெரிக்க நாட்டில் 5000 மாணவர்கள் மற்றும் மருத்துவர்களை வைத்து மாநாடு நடத்த வேண்டும் என்றாலே பெரிய அளவில் இடர்பாடுகள் இருக்கும், ஆனால் 11,000 மாணவர்களை கொண்டு தமிழ்நாடு அரசு இந்த மாநாட்டை மிகச்சிறப்பாக நடத்தி முடித்து புகழ் சேர்த்துள்ளது என்று கூறியுள்ளார். இது தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகத்திற்கு கிடைத்த புகழ் மகுடமாகும்.*

*இந்த மாநாட்டில் ஆற்றப்பட்ட உரைகள், சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் ஆகியவற்றை புத்தகங்க ளாகவும் ஆவனங்களாகவும், காணொலி காட்சிகளாகவும் தனித்தனியே தயார் செய்து, ஒட்டுமொத்தமாக மருத்துவத் துறை பயன்பெறும் வகையில் ஒன்றிய அரசின் மருத்துவத்துறை நிர்வாகத்திற்கும், இந்தியாவில் உள்ள மற்ற மாநில சுகாதார நிர்வாக ங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட இருக்கிறது. நம்முடைய துறையின் செயலாளர் அவர்கள் ஒன்றிய அரசின் சுகாதார அலுவலர்களோடு இந்த முயற்சி குறித்து பேசியுள்ளார், அவர்களும் இந்த முய ற்சிக்கு பாராட்டுகள் தெரிவித்துள்ளார்கள். எனவே இந்த மாநாட்டின் வெற்றி என்பது ஒட்டு மொத்தமாக மருத்துவத் துறைக்கு ஒரு பயனுள்ள வெற்றியாக அமைய வேண்டும் என்கின்ற வகையில் இந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது*

*இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.*





கலைஞர் 100
1924 - 2024
26.01.2024
விடுதலை சிறுத்தைகள் கட்சி
நடத்தும்
வெல்லும் சனநாயகம்
மாநாட்டிற்கு
வருகை தரும்
மாண்புமிகு.
கழகத் தலைவர்
அவர்களை வருக! வருக!!
என வரவேற்கிறோம்.
மாண்புமிகு.
கே.என்.நேரு
கழக முதன்மை செயலாளர்
நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
காடுவெட்டி
ந.தியாகராஜன் M.A., M.L.A.,
திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர்,
முசிறி சட்டமன்ற தொகுதி
மண்ணச்சநல்லூர் சீ.கதிரவன் B.E., M.L.A.,
மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதி
திருச்சி வடக்கு மாவட்ட தி.மு.க.
96 98 38 78 01, 80 15 38 30 38

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாடு மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, ஜன. 26 – இந்தியா–இலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவின் மூலம் மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திடவும் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இது பற்றிய விவரம் வருமாறு:

தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் 22-1-2024 அன்று கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (24-1-2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் IND-TN-10-MM-769 மற்றும் IND-TN-10-MM-750 என்ற பதிவு எண்களைக் கொண்ட மீன்பிடிப் படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், 22-1-2024 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சமீப காலமாக தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து இதுபோன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவது கவலையளிப்பதாக உள்ளது என்றும், இத்தகைய போக்கு பதட்டமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதால், இதில் ஒன்றிய அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய தொடர் கைது நடவடிக்கைகள், தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பறிப்பதோடு, மீனவ மக்களிடையே அச்சத்தையும், நிச்சயமற்ற சூழலையும் உருவாக்கியுள்ளதாகவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவச் சமூகங்களின் கலாச்சார மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை அச்சுறுத்தும் வகையில் உள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்தியா - இலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவினை அமைப்பதன் மூலம் இது சாத்தியமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

அப்பாவி மீனவர்கள் தொடர்ந்து இதுபோன்று கைது செய்யப்படுவதைத் தவிர்க்கவும், இந்திய மீனவர்களுக்கும், இலங்கைக் கடற்படையினருக்கும் இடையே நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாகவும், உரிய தூதரக வழிமுறைகளை மேற்கொண்டு கூட்டு நடவடிக்கைக் குழுவினை கூட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாடு மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விரைந்து விடுவித்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்தில்

# உயிரிழந்த 2 பேர் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன.26– விருதுநகர் மாவட்டம், வச்சக்காரப்பட்டி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின்குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் வெளியான அறிவிப்பு வருமாறு :-

விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம், வச்சக்காரபட்டி கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் (24-01-2024) காலை எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், முதலிபட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.வீரக்குமார் (வயது 55) த/பெ. கிருஷ்ணசாமி மற்றும் விருதுநகர் வட்டம், கன்னிசேரி புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.காளிராஜ் (வயது 20) த/பெ.பாண்டியராஜ் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவரும் கன்னிசேரி புதூர் கிராமத்தைச் சேர்ந்த சரவணக்குமார் (வயது 24) த/பெ. செந்தில் மற்றும் இனாம் ரெட்டியபட்டி கிராமத்தைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி (வயது 17) த/பெ.சுப்புராஜ் ஆகிய இருவருக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு தொண்டாற்றிடுவோருக்கு

# தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் இலக்கியமாமணி விருது!

## தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

*சென்னை, ஜன. 26- தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-*

*பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த் தாயின் அறிஞர் பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் வழங்கி, அவர்தம் புலமைக்கும் தொண்டுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது. அவ்வகையில் மரபுத்தமிழ், ஆய்வுத்தமிழ், படைப்புத் தமிழ் ஆகிய வகைப்பாட்டில் மூன்று அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் உயரிய விருதான இலக்கியமாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது. இலக்கியமாமணி விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் ஐந்து இலட்சத்திற்கான காசோலை, ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை அளித்தும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பு செய்யப்பெறுவார்கள்.*

*இலக்கியமாமணி விருது 2022ஆம் ஆண்டிற்கு கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர்* **அரங்க. இராமலிங்கம்** *(வயது 68) (மரபுத்தமிழ்), விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த* **கொ.மா.கோதண்டம்** *(வயது 83) (ஆய்வுத்தமிழ்), கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த* **முனைவர் சூர்யகாந்தன்** *(மா.மருதாச்சலம்) (வயது 67) (படைப் புத்தமிழ்) ஆகியோர் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு நேர்வாக நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி* **மணி அர்ஜீணன்** *(வயது 70) (மரபுத்தமிழ்), திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த* **அர. திருவிடம்** *(வயது 77) (ஆய்வுத்தமிழ்), சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த* **க.பூரணச்சந்திரன்** *(வயது 74) (படைப்புத்தமிழ்) ஆகியோர் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.*

*2023ஆம் ஆண்டிற்கு இலக்கியமாமணி விருதிற்கு கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த* **ஞா.மாணிக்கவாசகன்** *(வயது 94) (மரபுத்தமிழ்), திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பேராசிரியர்* **சு. சண்முக சுந்தரம்** *(வயது 73) (ஆய்வுத்தமிழ்), சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர் இலக்கியா* **நடராசன் (எ) ச.நடராசன்** *(வயது 64) (படைப் புத்தமிழ்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.*

*இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி விபத்தில் காயம்!

# விரைவில் குணமடைய விழைகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

**சென்னை, ஜன. 26 - மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அவர்கள் விபத்தில் சிக்கி, காயமடைந்தது குறித்த தகவல் அறிந்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அவர் விரைந்து குணமடைய விழைவதாகக் குறிப்பிட்டுள்ளார்.**

மேற்கு வங்க முதல்வர் சகோதரி மம்தா அவர்களுக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான சம்பவம் அதிர்ச்சியும், கவலையும் அளிக்கிறது. அவர் விரைவில் குணமடைய விழைகிறேன். விரைவாக உடல்நலம் பெற்றுத் திரும்பும் வரை எங்கள் எண்ணங்கள் அவருடன் இருக்கும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நேற்று முன்தினம் (24.01.2024) சென்னை சேப்பாக்கம் காமராஜர் சாலையில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில், ரூபாய் 1.35 கோடி மதிப்பில், களப்பணிக்காக மேற்பார்வைப் பொறியாளர்களுக்கு 13 புதிய வாகனங்களை (Bolero Jeep) வழங்கினார். இந்நிகழ்வில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, இணை மேலாண்மை இயக்குநர் வெ.சரவணன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதித் திட்டம்!

## 6 ஆம் பதிப்பிற்கான விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன!

சென்னை, ஜன.26– தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதியின் 6வது பதிப்பிற்கான விண்ணப்பங்களை பெறத் தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசின் டான்சீட் (TANSEED) திட்டமானது, தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவும் விதமாக தொடங்கப்பட்டு இதுவரை நான்கு பதிப்புகள் நடைபெற்றுள்ளது. தற்போது 6 ஆம் பதிப்பிற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. டான்சீட் திட்டம் 2021 ம் ஆண்டு தொடங்கப்பட்டதில் இருந்து, இதுவரை 132 புத்தொழில் நிறுவனங்களுக்கு மானிய நிதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வழியாக பசுமைத் தொழில்நுட்பம், ஊரக வாழ்வாதார மேம்பாடு மற்றும் பெண்களை முதன்மை பங்குதாரர்களாகக் கொண்ட புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.15 லட்சமும், இதர துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.10 லட்சமும் வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளுக்கு ஓராண்டு கால தொழில் வளர் பயிற்சி, தொழில்முனைவு வழிகாட்டுதல்கள்,தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான புத்தொழில் நிகழ்வுகளில் பங்கேற்க முன்னுரிமை ஆகிய ஆதரவுகளும் வழங்கப்படும்.இதன் பொருட்டு தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கமானது 3 சதவீத பங்குகளை உதவி பெறும் புத்தொழில் நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும்.

புத்தாக்கச் சிந்தனை யுடன் செயல்படக்கூடிய, வருங்காலங்களில் அதிகளவு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் தொழில் மாதிரிகளைக் கொண்ட சமூகத்தில் நன்மாற்றங்களை விளைவிக்கும் வகையில் செயல்படக்கூடிய புத்தொழில் நிறுவனங்கள் யாவும் இத்திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் தமிழ்நாட்டினை தலைமையகமாகக் கொண்டிருக்க வேண்டும். மேலும், ஒன்றிய அரசின் டி.பி.ஐ.ஐ.டி தளத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். தகுதியான நிறுவனங்கள் www.startuptn.in இணையதளத்தின் வழியே, பிப்ரவரி 7ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் தகவல்களை அறிந்து கொள்ள விரும்பினாலும், ஏதேனும் வினாக்கள் இருந்தாலும் tanseed@startuptn.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

# மொழிப்போர் வீரர்களை வணங்கிச் சூளுரைப்போம்!



அரிப்படங் காத இந்தி
ஆதிக்கம்! அதைஎ திர்த்து
நெருப்பிலே உடல்க ருக்கி
நீத்தனர் உயிரை! சொந்த
விருப்பிலே நஞ்சை உண்டு
வீழ்ந்தனர்! முகம்ம லர்ந்தே
சிரிப்பொடு வரவேற் றார்கள்!
தீயினும் கொடிய சாவை!

அண்ணாவின் அழைப்பை ஏற்றார்!
அன்னைச்செந் தமிழே எங்கள்
கண்ணெனக் களம்பு குந்தார்!
கலைஞரின் இடிமு ழக்கம்
விண்ணிலே எதிரொ லிக்க
வீறுகொண் டெழுந்தார்! இந்த
மண்ணில்தாய் மொழியைக் காக்க
மாய்ந்தார்யார் தமிழ ரைப்போல்?

அடலேறு போல்கி ளர்ந்த
நடராசன், தாள முத்து,
படுகளம் கண்ட கீழப்
பழுவூரின் சின்னச் சாமி,
விடலைசா ரங்க பாணி,
வீரப்பன், அரங்க நாதன்,
நடுகல்லாய் ஆனார் முத்தும்,
நமதுசண் முகமும் தாமே!

சீர்தமிழ் உயிர்க்கச் செத்தார்
சிவலிங்கம், தண்ட பாணி!
போர்சிவ கங்கை பெற்ற
புதல்வன்ரா ஜேந்தி ரன்தான்
மார்பிலே குண்டு தாங்கி
மரணத்தைத் தழுவி னானே!
பேர்களை வரிசை யிட்டால்
பெருகுமே பட்டி யல்தான்!

அவர்விட்ட மூச்சுக் காற்றின்
அதிர்வலை அனலின் வீச்சு
தவறாமல் தொடரும் நீட்சி
தணலாகித் தகிக்கும் காட்சி
புவியையே வியக்க வைத்துப்
பூமியைச் சிலிர்க்க வைத்து
மவுனிக்கச் செய்த “சேலம்
மாநாட்டின்” மாட்சி யன்றோ!

கரம்பற்றி எழுச்சி ஓங்கிக்
கடலெனத் திரண்டார் நெஞ்சில்
உரம்பெற்ற இளைஞர்! எங்கள்
“உதயநி தி”க்குப் பின்னால்!
அரம்பெற்ற அறிவுக் கூர்மை!
ஆற்றலின் வலிமை யோடு
தரம்பெற்றுத் திகழ்வார்! அன்னைத்
தமிழ்நாடு தழைப்ப தற்கே!

குருதியில் மலர்ந்த கட்சி!
குறிக்கோளில் வளர்ந்த கட்சி!
பரிதியாம் “தலைவர் ஸ்டாலின்”
படையென இயங்கும் கட்சி!
எரிதழல் முன்கு திக்கும்
சருகுகள் பகைவர் சூழ்ச்சி!
வருக!நாம் வடிவ மைப்போம்!
வருங்கால “இந்தி யாவை!”

வரலாற்றுக் கருவூ லத்தில்
வாழ்கின்ற மொழிப்போர் வீரர்
அரிதான தியாகம் போற்றி
அவர்புகழ் வாழ்க! என்றே
குரல்தந்து வணக்கம் சொல்வோம்!
கொள்கையிற் செல்வோம்! குள்ள
நரிகளின் சதிகள் வெல்வோம்!
“நாற்பதும் நமதே” என்போம்!



- கவிச்சுடர்
கவிதைப்பித்தன்



மன்னார்குடியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ,மாவட்ட ஊராட்சி தலைவர் தலையா மங்கலம் ஜி.பாலு, நகரமன்ற தலைவர் மன்னை.த.சோழராஜன் ,ஒன்றிய பெருந்தலைவர் சோம. செந்தமிழ் செல்வன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கலைவாணி மோகன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.



அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூர் பேருந்து நிலையத்தில் உள்ள மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் திருவுவச் சிலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் இரா.கென்னடி, ரெ.அசோகசக்ரவர்த்தி, மா.அன்பழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாளை.அமரமூர்த்தி, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### முதற்கட்ட அறுபடை வீடு ஆன்மிகப் பயணம் ஜனவரி 28 அன்று,

# இராமேசுவரம் - காசி ஆன்மிகப் பயணம் ஜனவரி 31 அன்று தொடங்கப்பட உள்ளது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜன. 26 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்திற்கு தகுதியுடைய மூத்த குடிமக்கள் விண்ணப்பிக்கலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகியவற்றிற்கு ஆன்மிகப் பயணம் சென்று வருபவர்களுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருத்தலங்களு க்கும் சுற்றுலாத்துறையுடன் இணைந்து ஆன்மிகப் பயணம் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகிறது. கடந்தாண்டு முதல் இராமேசு வரத்திலிருந்து காசிக்கு பக்தர்கள் கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்க் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப் பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளான திருப் பரங்குன்றம், திருச் செந்தூர், பழனி, சுவாமி மலை, திருத்தணி, பழமுதிர்சோலை ஆகியவற்றிற்கு மூத்த குடிமக்கள், ஒரேமுறையாக சென்று தரிசனம் செய்திடும் வகையில் கட்டணமில்லாமல் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட 200 பக்தர்கள் வீதம் ஆண்டிற்கு 5 முறை அதாவது 1,000 பக்தர்களை அழைத்து சென்று தரிசனம் செய்து வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டப் பயணம் வருகின்ற ஜனவரி 28 அன்று சென்னை, கந்தக்கோட்டத்தில் தொடங்க உள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கான அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்திற்கு தமிழ்நாட்டில் வசிக்கும் இந்து மதத்தைச் சேர்ந்த பக்தர்களிடமிருந்து 1,000 நபர்களை தேர்வு செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதற்கான விண்ணப்ப படிவங்களை தங்களது முகவரி அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் அலுவலகங்களிலிருந்து பெற்றும், www.hrce.tn.gov.in என்ற துறையின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தும் பயன்படுத்திக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை உரிய இணைப்புகளுடன் மீள அதே மண்டல இணை ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

மேலும், இராமேசுவரத்திலிருந்து காசிக்கு ஆன்மிகப் பயணமாக இந்தாண்டு 300 பக்தர்கள் 5 கட்டங்களாக அழைத்துச் செல்லப் படுகின்றனர். இதன் முதற் கட்டப் பயணம் வரும் ஜனவரி 31-ந் தேதி இராமேசுவரத்தில் தொடங்கப் பட உள்ளது எனவும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### கோவை - 35 வது வட்டத்தில்

# அறிஞர் அண்ணா நகரில் - மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம்!

## சோ.துரைபாண்டியன் - கா.பொன்னரசு - சம்பத் எம்.சி. பங்கேற்பு!

கோவை, ஜன. 26 - தாய் மொழியாம் தமிழ் மொழியை காக்க, ,தங்களது உயிரினை துச்ச மெனக்கருதி உயிர் நீத்த மொழிப்போர்த் தியாகிகளுக்கு, வீரவணக்கம் செலுத்திடும் வகையில்,

அறிஞர் அண்ணா நகர் காவல் செக்போஸ்ட் அருகில் நேற்று (25..1..2024 ) காலை 9 மணிக்கு, அந்த 12 மொழிப்போர் தியாகிகளுக்கு,

அவர்களின் தியாகத்தை போற்றிடும் விதமாக வீர வணக்கம் செலுத்தி, மொழிப்போர்த் தியாகிகளை போற்றிடும் வகையில் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப் பட்டது.

அவர்களது மொழிப்போர் தியாகங்களை நினைவு கூரும் வகையில் 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத்தால் மரக்கன்றுகள் நடப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை சந்திரலிங்கம் செய்திருந்தார் ஒருங்கிணைந்த மாவட்டக் கழகங்களின் அலுவலக மேலாளர் ஆர். எஸ்.புரம் பூபாலன் சார்பில் இலவசமாக நோட்டீஸ்கள் கொடுத்து உதவினார் .

இந்நிகழ்வில் அவைத்தலைவர் சோ.துரை பாண்டியன் தலைமையில் முன்னாள் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் துணை அமைப்பாளர் கா.பொன்னரசு முழக்கங்கள் எழுப்பி அனைவரையும் ஒருங்கிணைத்தார். கீழ்க்கண்ட நலச்சங்க நிர்வாகி கள், கழக உடன் பிறப்புகள் தோழமைக் கட்சியினர் , இப்பகுதி மக்கள் பெருவாரியாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் முன்னாள் காவல் துணை ஆய்வாளர் மதியழகன், இலக்கிய அணி ரவி முரசு , திருமதி மல்லிகா ஜெகதீசன், இளைஞர் அணி விக்னேஷ், ராஜ ராஜேந்திரன், லட்சுமி நகரைச் சார்ந்த அரிமா, கேபினட் செகரட்டரி பூமி நாதன், காலபைரவர் கோயில் தாளாளர் கண்ணன், பெட்டிக்கடை சசிகுமார், ராமமூர்த்தி, தியேட்டர் ராம்குமார், வீரப்பன், பால சண்முகம், இ சர்வீஸ் மோகன்ராஜ், ராதாகிருஷ்ணன், கான்ட்ராக்டர் ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு முழக்கங்களையும் முழங்கினர்.

# மன்னார்குடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

## அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்!

திருவாரூர், ஜன. 26 - திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் விதவை மகள், ஆதரவற்ற பெண், விதவை மறுமணம், கலப்பு திருமணம் ஆகிய திட்டங்களின் கீழ் தாலிக்கு தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கும் விழா தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மாவட்ட ஆட்சியர் சாருஶ்ரீ சுந்தர் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்ததாவது...

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு மக்கள் நல திட்டங்கள் கொண்டுவரப்பட்டு மிக சிறப்பாக மக்களுக்கு வழங்கப்பட்டுவருகிறது. அதுமட்டுமின்றி பெண்களுக்கான பல்வேறு சிறப்புத் திட்டங்கள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப் பட்டுவருகின்றது. இதனை பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பெண் கல்வி மிக முக்கியமானது. பெண் குழந்தைகளை படிக்க வைக்க வேண்டும் பெண் குழந்தைகளை மேல்நிலைப்படிப்பிற்கு ஊக்குவிப்பதற்காக புதுமை பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு திட்டங்கள் உள்ளது. பெண்கள் படித்தால் மட்டுமே குடும்ப பொருளாதாரம் உயரும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் பெண்களுக்கான சிறப்பு திட்டங்கள் உள்ளது. கல்வி பெற்ற பெண்கள் இருப்பது நன்று. அதுபோன்று கல்வி பெறாத பெண்களுக்கும் கல்வி பெற வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு அரசு டெல்டா பகுதிகளில் மிக விரைவில் பெண்களுக்கான உயர்தர வேலைவாய்ப்புகளை வழங்கும். அதுபோன்று விவசாயம் சார்ந்த தொழிற்பேட்டைகள் நிறுவு வதற்கும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது. அதுபோன்று கிராமப்புற பகுதிகளும் முழுமையான வளர்ச்சி பெற வேண்டும் என்பதை இவ்வரசின் நோக்கமாக உள்ளது என தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, 2023-2024ம் நிதியாண்டு விதவை மகள், ஆதரவற்ற பெண், விதவை மறுமணம் மற்றும் கலப்பு திருமணம் ஆகிய 4 திருமண நிதியுதவி திட்டங்களின் கீழ் 8 கிராம் தங்க நாணயத்துடன் 391 பயனாளிகளுக்கு ரூ. 50 ஆயிரம் திருமண நிதியுதவியும், 124 பயனாளிகளுக்கு 8 கிராம் தங்க நாணயத்துடன் ரூ.25 ஆயிரம் திருமண நிதியுதவியும் என 495 பயனாளிகளுக்கும், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 58 தாய்மார்களின் 117 பெண் குழந்தைகளுக்கு தலா ரூ.25000 வீதம் ரூ.29,25,000 மதிப்பிலான வைப்புத் தொகைக்கான ரசீதையும் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஶ்ரீ உடனிருந்தார்.

இந்நிகழ்வில், நகர்மன்ற தலைவர் மன்னை. த. சோழராஜன், ஒன்றியக் குழு தலைவர் சோம.செந்தமிழ்ச்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த், நகர செயலாளர் வீரா.கணேசன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கலைவாணி மோகன், நகர்மன்ற துணைத்தலை வர் கைலாசம், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### கோவை மாநகர் மேற்கு மாவட்டக் கழக முன்னாள் பொறுப்பாளர்

# பையா (எ) ஆர்.கிருஷ்ணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஜன. 26 - கோவை மாநகர் மேற்கு மாவட்டக் கழக முன்னாள் பொறுப்பாளர் பையா (எ) ஆர்.கிருஷ்ணன் மறைவுக்கு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

கோவை மாநகர் மேற்கு மாவட்ட கழகத்தின் முன்னாள் பொறுப்பாளர் பையா என்ற ஆர்.கிருஷ்ணன் அவர்கள் மரணமடைந்த செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

கவுண்டம்பாளையம் பகுதியில் அவர் ஆற்றி வந்த மக்கள் தொண்டு மகத்தானது. அவருடைய அயராத சமூகப்பணிகள், அப்பகுதி மக்களால் மட்டுமின்றி கழகத்தவராலும் என்றென்றும் மறக்க இயலாதது.

பையா என்ற கிருஷ்ணனின் திடீர் மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பையா என்ற ஆர்.கிருஷ்ணன் அவர்களின் களப்பணியும், கழகப் பணியும் என்றென்றும் நினைவு கூரப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# எழும்பூர் வீ.நாகராஜன் தாயார் படத்திறப்பு!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., பங்கேற்பு!

சென்னை, ஜன. 26 - எழும்பூர் தொகுதி, 78 ஆவது வட்டத்தைச் சேர்ந்த முன்னாள் பகுதிப் பிரதிநிதி வீ.நாகராஜின் 95 வயதான தாயார் வீ. சுலோச்சனா, கடந்த 10.01.2024 அன்று வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார்.

அவரது திருவுருவப் படத்தினைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தா மன் நேற்று முன்தினம் சூளை, ரங்கையா தெருவிலுள்ள அவரது இல்லத்தில் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தமன், அவைத் தலைவர் வெ.மருதன், தலைமைக் கழகப் பேச்சாளர் நேரு, பகுதிப் பிரதிநிதி சூளை பன்னீர்செல்வம், வழக்கறிஞர் நேரு பிரபாகரன், குணா, முத்து, மணி, ரயில்வே ரவி, ஆட்டோ குப்பன், இருமையா, பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோடம்பாக்கம் தே.மு. சிவலிங்கம்

**சனவரி 26 (1965)**



சிறுவயது முதலே தமிழ்ப்பற்றுடன் விளங்கிய இவர், தனது பகுதியில் இருந்த டாக்டர் தருமாம்பாள் மன்றத்தில் உறுப்பினராக இருந்தார்.

இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழகமே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த மொழிப் போராட்ட காலத்தில், தான் தீக்குளிப்பதற்கு முதல்நாள், தனது நண்பர்களிடம் “நாளை இந்தி ஆட்சி மொழி ஆகிறது. இது துக்க தினம். கறுப்புச் சின்னம் அணியப்போகிறேன்” என்று கூறியிருக்கிறார்.

1965ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் விடியற்காலை நான்கு மணியளவில், வீட்டிற்கு எதிரே உள்ள மைதானத்தில் “உயிர் தமிழுக்கு; உடல் தீயிக்கு – தே.மு.சிவலிங்கம்” என்று எழுதி வைத்துவிட்டு, தீக்குளித்து உயிர் துறந்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வி.பி. அகிலன்

**சனவரி 26 (2016)**



இளம் வயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட துணைச் செயலாளராக – திருவள்ளூர் மாவட்ட அவைத் தலைவராகப் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும், சைதாப்பேட்டை கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், திருவள்ளூர் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, நெருக்கடிகால ‘மிசா’ கைதியாக ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.


**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தமிழனின் வீரத்தைப் பறைசாற்றும் 'கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல்' பிரமாண்ட அரங்கை - திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்த எழில்மிகு காட்சிகள் !





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் உலகத்தரத்துடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் திறப்பு விழாவில், அரங்கத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு தங்க மோதிரம் வழங்கி பாராட்டினார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திராவிட சினிமா 42

**■ வீ.மா.ச.சுபகுணராஜன்**


**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**





# திராவிட சினிமாக்களும் ஒவ்வாமை ஆய்வுகளும்!

திராவிட அரசியல் மற்றும் திரைப்படங்கள் குறித்த ஆய்வுகள் இங்கு ஏராளமாக நடந்துள்ளன. ஆனால், அவை பெரும்பாலும் வெள்ளை/கறுப்பின வெளிநாட்டு மற்றும் ஒன்றிரண்டு வட இந்திய ஆய்வாளர்களின் வேலைப்பாடுகள். தமிழ் அறியாத வெளிநாட்டு மற்றும் இந்திய ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுத் தரவுகளைத் தமிழ்ப் பார்ப்பன மற்றும் திராவிட ஒவ்வாமை கொண்ட முற்படுத்தப்பட்ட சாதியினரிடமிருந்து மட்டுமே பெற்றனர்.



பார்ப்பனத் தரவுகள் எத்தனை எதிரானதாக இருக்க முடியுமென விளக்க வேண்டியதில்லை. பார்ப்பனப் பார்வையில், 'திராவிடம் ஓர் இன வாதக் குறுகல் (RACIAL AND PAROCHIAL) பார்வை கொண்ட பிரிவினைக் கோட்பாடு, மொழி, இனவெறி அடிப்படை கொண்டது'. இது போதாதா, ஓர் ஆய்வாளன் மனதில் விஷம் பாய்ச்சுவதற்கு..? போதாக் குறைக்கு அவர்கள் தங்களது ஆய்வுத் தரவுகளை ஆங்கில இதழ்களான 'தி இந்து', 'மெயில்' போன்றவற்றின் ஆவணக் காப்பகங்களிலிருந்தும் பெற்றனர்.

'மவுண்ட் ரோடு மகாவிஷ்ணு' என பேரறிஞர் அண்ணாவால் விளிக்கப்பட்ட 'தி இந்து' இதழ் ஆவணங்களின் தரவு, எத்தனை எதிர்மறையானதாக இருந்திருக்குமெனச் சொல்லத் தேவையில்லை.

## குழப்பவாத இசங்கள்

இன்னும் முக்கியமாகக் கருதிப் பார்க்க வேண்டியது, இந்த ஆய்வுகள் பெரும்பாலும் தி.மு.க. ஆட்சிக்கட்டில் ஏறிய பின் நடந்தவை. அப்போது ஆய்வுகளின் கவனத்தை, குறிப்பாக சினிமா குறித்த ஆய்வுகளின் கவனத்தை ஈர்த்தவர் எம்.ஜி.ஆர் எனும் நாயகனே. உலகெங்கும் திரைப்பட ஆய்வுகளின் கவனம் தவிர்க்கவியலாமல், நாயகன் என்ற பிம்பத்தைப் பிரதானமாகக் கொண்டது.

தேசிய உன்னதத்துக்கு எதிரான திராவிட இனவாதத்தை முறியடிக்க, அதன் உள்ளிருந்தே உதவி செய்தவர் எம்.ஜி.ஆர். ஆனால், இதுவரை தோன்றாத ஒரு வெளிச்சம் இப்போது தெரிகிறது. எம்.ஜி.ஆர் எனும் இந்திய / திராவிட காந்திய / அண்ணாயிஸ தேசியவாதியின் மாபெரும் பங்களிப்பொன்று உள்ளது. அதாவது, இந்திய தேசியத்தை தமிழ்நாட்டில் பெருமளவில் காலூன்ற விடாத காரணிகளில் அவரும், அவரது குழப்பவாத 'அண்ணாயிஸ தேசியவாதமும்' உண்டு.


திராவிட அரசியலுக்குள்ளேயே அதன் மாற்று உறுப்பு போன்ற பகுதியாக இந்திய தேசியத்தை இணைத்த பெருமை எம்.ஜி.ஆரையே சேரும் எனக் கருதுகிறேன். எம்.ஜி.ஆரின் இந்த 'காந்திய இந்திய /திராவிட தேசியமும்' இந்திய தேசியம் என்பதன் ஆக்கிரமிப்பைத் தடுக்கும் சக்தி எனக் கருதுகிறேன். ஆம், திராவிடத்தின் ஒவ்வாமையான 'இந்திய தேசியம்' அதன் பகுதியாகிப் போனதால், தேசியவாதம் நேரடியாகக் காலூன்ற இயலவில்லை என்பேன்.

ஆனால், இந்தக் குழப்பவாதம் உருவாக்கிய இடைவெளியே, பார்ப்பன ஜெயலலிதா திராவிடக் கட்சி ஒன்றுக்குத் தலைமையேற்கும் விபரீதத்துக்கும் வழிவகுத்தது. எனினும், அந்தப் பார்ப்பனியமும் திராவிடக் கோட்பாட்டு எல்லைகளுக்குள் மட்டுமே இயங்க வேண்டிய கட்டாயமும் நிகழ்ந்தது.

## வாக்களிப்பில் பிம்பத்தின் தாக்கம்

வெள்ளை இன ஆய்வாளர்களின் முன் வைப்புகளில், ஆய்வு முடிவுகளில் சில கருதத்தக்க கூறுகள் உண்டுதான். ராபர்ட் ஹார்ட் கிரேவ் போன்றவர்களின் ஆய்வின் முடிவுகளைவிட, அவர்களது ஆய்வுத் தரவுகள் பயனுள்ளவை. குறிப்பாக, எம்.ஜி.ஆர் - சிவாஜி ரசிகர்களின் வாக்களிப்பு முறை குறித்த அவரது தரவு, தமிழ் திரைப்படப் பார்வையாளர்களில் சாமானியர்கள் ஒட்டு மொத்தமாக எம்.ஜி.ஆரின் பிம்பப் பொறியில் சிக்கிவிட வில்லை என்பதற்கான ஆதாரங்கள்.

1967-ஆம் ஆண்டின் தேர்தலில் எம்.ஜி.ஆர் - சிவாஜி ரசிகர்கள் வாக்களித்த விதம் குறித்த அவரது ஆய்வுத் தரவு, எம்.ஜி.ஆர். ரசிகர்கள் 80 சதவிகிதம் பேர் தி.மு.க.வுக்கு வாக்களித்தனர் என்றும், சிவாஜி ரசிகர்களில் 60 சதவிகிதம் பேர் தி.மு.க.வுக்கே வாக்களித்தனர் என்றும் தெரிவிக்கிறது. இதன் பொருள், தி.மு.க.வினராக இருந்த போதும் பலர் சிவாஜி ரசிகர்களாக இருந்தனர் என்பதும், தேர்தல், வாக்களிப்பு எனும் போது தங்களது கட்சிக்கே வாக்களித்தனர் என்பதும் விளங்கும்.



அதே போல சிவாஜி ரசிகர்களில் நேரடியான அரசியல் சார்பு அற்றவர்கள் தி.மு.க.வுக்கு வாக்களித்தனர் என்பதும் விளங்கும். கூடுதலாக, எம்.ஜி.ஆர் ரசிகர்களில் ஒரு சிறிய சதவிகிதத்தினர் தி.மு.க.வுக்கு வாக்களிக்கவில்லையெனத் தெரிகிறது. எம்.ஜி.ஆர் தனிக்கட்சி கண்ட போது அவரது ரசிகர்களில் குறிப்பிடத்தக்க சதவிகிதத்தினர் அவரது கட்சியுடன் இணையாமல், திராவிடக் கருத்தியல் சார்ந்து இயங்கும் பொருட்டுத் தி.மு.க.வில் தொடர்ந்தனர். எம்.ஜி.ஆரால் தி.மு.க. வாக்கு வங்கியில் ஒரு சிறிய தொகுப்பை மட்டுமே உடன் கொண்டு செல்ல முடிந்தது. அவருக்காகத் திரண்டவர்களில் பெரும்பான்மையினர் காங்கிரஸ் மற்றும் பல உதிரி அமைப்புகளில் இருந்தவர்கள் என்பதே தரவு.

**காலத்துக்கேற்ற மொழியில், தளங்களில் திரைப்படங்களை உருவாக்கிச் சாதனை செய்தவர் கலைஞர் ஒருவர் மட்டுமே. அதனால்தான் கலைஞர் என்றால், அது கலைஞர் மட்டுமே என்று நெஞ்சை நிமிர்த்திச் சொல்கிறோம்.**

## பொதுப் புத்தியும், விமர்சனப் பார்வையும்

இதன் மூலம், சாமான்யர்களின் 'பொதுப் புத்தி' முற்றிலுமாக ஒரேவிதமாக ஆக்கிரமிக்கப்படுவதில்லை என்பது விளங்குகிறது. மார்க்சிய அறிஞர் கிராம்சியின் 'பொதுப் புத்தி' குறித்த கருத்தாக்கத்தில் 'நற்புத்தி' (GOOD SENSE) என்பது குறித்த பார்வையும் உள்ளது. அதாவது 'பொதுப் புத்தி, முற்றிலுமாக எளிதில் வளைக்கப்படும் தன்மையது இல்லை. அதன் இருப்பில் பொது நன்மை, சமூக மேன்மை அக்கறைகளும் உண்டு' என்ற கோட்பாட்டு விளக்கங்கள் உள்ளன.

அந்த எளிய மனிதர்களின் 'நற்புத்தி'யோடு தமிழ்ச் சூழலில் யார் உரையாடியது? வேறு யார் பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற திராவிடச் சிந்தனையின் மூலவர்கள்தான். பெரியாரின் தெறிப்பான சிந்தனைகள் எளிய மனிதர்கள் மத்தியில் பேசப்பட்டவைதானே..! அறிஞர் அவைகளில் தத்துவ விசாரமாகப் பேசப்பட்டவற்றை எளிய மனிதர்களின் மொழியில் உரையாடியவர்தானே பெரியார்..! அண்ணாவின் அடுக்குமொழி ஒரே வேளையில் கேட்பவர்களின் இதயத்தோடும் சிந்தையோடும் உறவாடியதுதானே..! கலைஞரின் கனல் தெறிக்கும் கர்ஜனைகள் சிந்தையையும் செயலையும் செறிவூட்டியவைதானே..!

இங்கே இருவிதமான திரைப்பட விமர்சனப் போக்குகள் நிலவின. ஒன்று, தீவிர இடதுசாரி சார்பான திரைப்படச் சங்கங்கள் மூலமாக உலக சினிமா அறிமுகம் பெற்றதன் மூலம் இந்திய / தமிழ்த் திரைப்படங்களைக் கிஞ்சித்தும் மதிக்காத அறிவுஜீவிகள். அவர்கள் புரட்சிகர சினிமாவுக்காக ஏங்கிக் கொண்டிருந்து, அத்தி பூத்தாற் போல் வரும் படங்களைக் கொண்டாடியவர்கள். இன்னொரு தரப்பு, பார்ப்பன/ பார்ப்பனிய கலை உன்னதவாதிகள். அவர்களால் கலையின் உன்னதத்தைத் திராவிட இயக்கத்தவர் படங்களில் காண முடியாமல் போனதில் வியப்பில்லை. இடதுசாரிப் பார்வை என்ற ஆரம்ப கால விலகலிலிருந்து மீண்டு, திராவிடச் சினிமாக்களை நேர்மறையாகப் பார்க்கத் துணிந்தவர் ஈழப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள்.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதும், தொடர்ந்து எம்.ஜி.ஆர் தடம் புரண்ட பிறகும், திராவிட இயக்கத்தவர் பட உருவாக்கங்களில் ஒரு சுணக்கம் ஏற்பட்டது. ஆனாலும், ஏற்கெனவே விதைக்கப்பட்ட விதைகளின் செடிகள் சற்று வடிவம் மாறி இயங்கின. ஆட்சி சார்பான பார்வைகளை வணிகச் சினிமா ஏற்பதில்லை. அந்தத் தேக்கத்தை உடைத்து, காலத்துக்கேற்ற மொழியில், தளங்களில் திரைப்படங்களை உருவாக்கிச் சாதனை செய்தவர் கலைஞர் ஒருவர் மட்டுமே. அதனால்தான் கலைஞர் என்றால், அது கலைஞர் மட்டுமே என்று நெஞ்சை நிமிர்த்திச் சொல்கிறோம். 70 களுக்குப் பின்னரான தமிழ்த் திரைப்படங்களில் திராவிடக் கருத்தியல் புழங்கிய விதம் குறித்தும், கலைஞரின் தனித்துவமான பங்களிப்புகள் குறித்தும் இனி வரும் வாரங்களில் பார்ப்போம்.

...படம் விரியும்

## இதையே இப்பத்தான் யோசிக்கிறீங்களா ஜி..?

சாலை விபத்தில் சிக்கியவர்களுக்கு 'ஆயுஷ் மான் பாரத் மருத்துவமனை'களில் கட்டணமில்லா சிகிச்சை வழங்க ஒன்றிய அரசு திட்டமிட்டு வருவதாக, ஒன்றிய சாலைத் துறைச் செயலாளர் அனுராக் ஜெயின் கூறியிருக்கிறார். அடுத்த 4 அல்லது 5 மாதங்களில் இந்தத் திட்டம் அமலுக்கு வரலாம் எனக் கூறியிருக்கிறார். காவிகளுக்கு இது பெரிய விஷயமாக இருக்கலாம். ஆனால், தமிழர்களுக்கு இது, 'இதையே இப்பத்தான் யோசிக்கிறீங்களா..?' மொமென்ட்.

ஒன்றிய அரசு இப்படியொரு திட்டம் குறித்து, யோசித்து அதற்கான முடிவுகள் எடுப்பதற்கு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நமது திராவிட மாடல் அரசு, 'இன்னுயிர் காப்போம்- நம்மைக் காக்கும் 48' என்ற தொலைநோக்குத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திவிட்டது.

சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைத்திட, விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்துக்குக் கட்டணமில்லா உயிர் காக்கும் அவசர சிகிச்சைக்கான அந்தத் திட்டத்தை 2021 டிசம்பர் 18 அன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் முதலமைச்சர் தொடங்கி வைத்தார். அவசர சிகிச்சைக்காக ஒரு லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இந்தத் திட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள 232 தனியார் மருத்துவமனைகள் உட்பட 692 மருத்துவமனைகள் இணைக்கப் பட்டுள்ளன.

முதல் 2 ஆண்டுகளில் மட்டும் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் இந்தத் திட்டத்தால் பயன்பெற்றுள்ளனர். இதற்காக சுமார் 175 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டுள்ளது தமிழ்நாடு அரசு. இந்தியாவுக்கு வழிகாட்டும் 'திராவிட மாடல்' என நமது முதலமைச்சர் கூறியதற்கு இன்னொரு சாட்சியாக இருக்கிறது இந்தத் திட்டம்.

## :ப்ளாஷ்பேக்



### கேமராவுடன் பங்கேற்பு!

இன்றைய கழகத் தலைவர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த 2006-ஆம் ஆண்டு, எங்கள் 103-வது வட்டம் அண்ணா நகர் பகுதியில், சென்னை மாநகராட்சிப் பள்ளியில் புதிய கட்டடத்தைத் தொடங்கி வைக்க வருகை தந்தார். அந்தக் காலத்தில் இளைஞர் அணியில் பணியாற்றிய காரணத்தால் அந்த நிகழ்வில் நான் எனது கேமராவுடன் பங்கேற்றேன். சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஜெ.அன்பழகன், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்ர மணியன் ஆகியோர் உடனிருந்தனர்.



பாஸ்கர்

**-பாஸ்கர், பகுதிப் பிரதிநிதி, 100-வது வட்டம், அண்ணா நகர் வடக்குப் பகுதி, சென்னை.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### மாதத்தில் 145 கூட்டங்கள்!

**1949-இல் தி.மு.க.வைத் தொடங்கிய அண்ணா, அடுத்த 2 ஆண்டுகளில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான கூட்டங்களில் பேசினார். ஒரு மாதத்துக்கே 30 நாட்கள் தான், ஆனால், சராசரியாக மாதம் ஒன்றுக்கு 145 கூட்டங்களில் பேசினார் அண்ணா. அதில் உச்சமாக ஒரே நாளில் ஒருமுறை 27 கூட்டங்களில் பேசினார். ஒரு கூட்டத்தில், பேசியதை இன்னொரு கூட்டத்தில் பேசாமல், புதிதாக ஒன்றைப் பேசுவார் என்பதே அண்ணாவின் தனிச்சிறப்பு.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 369




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131